தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 3 | சென்னை | 3—11—56 | சனிக்கிழமை | இதழ் 10

நூற்றைம்பது இடங்களில்!

"தேர்தல் ஆய்வுக்குழுவினர் நமது பொதுச் செயலாளர் தலைமையில் தமிழகமெங்கணும் சுற்றுப்பயணம் செய்து, தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவதற்குரிய வாய்ப்புகளை, எல்லா மாவட்டங்களிலிருந்தும் அறிந்து வந்திருக்கிறார்கள்.

"நிலைமைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்த பின்னர் அவர்கள் தப்த சிபாரிசில், எனக்குள்ள வழக்கமான சந்தேகத்திற்காகச் சில இடங்களைக் கழித்துவிட்டு 150 இடங்களுக்கு நாம் தேர்தலில் போட்டி இடலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

"கழகத்தில் நான் எப்போதுமே கொஞ்சம் சந்தேகமும், சற்றுக் குழப்பமான மனநிலையும் உடையவன்; ஆனால் எனது சந்தேகத்தைப் போக்கக்கூடிய வகையிலும் நம்பிக்கையை அதிகரிக்கும் வகையிலும் குழப்பத்தை நீக்கும் வகையிலும் ஆய்வுக் குழுவினர் செய்தி கொண்டு வந்திருக்கின்றனர்.

"மகிழ்ச்சிகரமான இந்தச் செய்தியை அறியும் நீங்கள் ஒன்றை மறந்துவிடக் கூடாது. 150 இடங்களுக்குப் போட்டியிடுவது என்றால் அது மகிழ்ச்சிக்குரியது என்பது மட்டுமின்றி நாம் எவ்வளவு வேலைப் பளுவைச் சுமக்கவேண்டும் என்பதையும் சொல்லுவதாகும்.

"அந்த வேலைப் பளுவினை நாங்கள் சுமப்பதற்கு, மக்கள் தங்கள் ஆதரவினை இப்போது போல் தொடர்ந்து தந்தாக வேண்டும். தோழர்கள் முன்னை விடக் கடுமையாக உழைத்தாக வேண்டும். அப்போதுதான், நாம் மேற்கொண்டிருக்கிற இந்த 150 இடங்களுக்குப் போட்டியிடுவது என்ற வேலையை வெற்றிகரமாக முடிக்கமுடியும்."



எஸ். எஸ். தென்னரசு

தைமூர்

“தைமூர் காதலித்தானு? நம்பமுடியவில்லையே! காதலிக்க அவனுக்கு நேரமேது? சிங்காதனங்களை இழந்து தவிக்கும் சிற்றரசர்களின் ஓலங்களை ரசித்து முடிக்கவே காலம் போதவில்லையே அவனுக்கு?”-தாதாரியத் தலைவன் தைமூரைப் பற்றி ஒரு சில சரித்திராசிரியர்கள் இப்படித் தான் எழுதிவைத்திருக்கிறார்கள். ஆனால் தைமூர்,

“எனக்கு உள்ளமிருக்கிறது; அதைப் புரிந்துகொள்ளும் மனிதர்கள்தான் இல்லை” என்றான்.

உலகத்து மன்னர்களையெல்லாம் நடுநடுங்க வைத்த தைமூர்ப் பெருவேந்தன், அவருடைய வாழ்நாளில் உலக சரித்திரத்தை என்றென்றும் காயாத ரத்தத்தில் ஊற வைத்துப் போயிருக்கிறான். அலெக்சாண்டரைப்போல், நெப்போலியனைப்போல், சீசரைப்போல், செங்கிஸ்கானைப் போல், நீடித்து நிற்கக்கூடிய புகழைப் பெற்றுவிட்ட சாமற்கண்டின் தலைவனான தைமூர், மங்கோலியரின் நாடுகளைப் பிடித்து இந்தியாவில் அவன் முதன் முதலில் தன் ரத்தச் சுவடுகளைப் பதித்தான். சரேசம், பெர்சியா, மீடியாடாப்ரிஸ், ஆர்மேனியா, டமாஸ்கஸ், அலெப்போ, பாபிலேன், பாக்காத் முதலிய நாடுகளும் அவனுடைய சிகப்புக்குடைக்குள் அடங்கிக்கிடந்தன.

அப்பேர்ப்பட்ட ‘அசகாயசூர’னின் வாழ்க்கையில் தென்றலாக வந்தாள் ஒருத்தி. சூரானுக்கு எதிரே பைபிளா என்று கர்ஜித்த காடிக்குரலை எப்படியோ கட்டுப் படுத்திவிட்டாள். தட்டிப்பேச ஆளில்லாதபோதுதான் மனிதன் எதையும் செய்யத் துணியும் மிருகமாகிவிடுகிறான் என்று நிரூபித்தாள். ஒளி முடி மன்னர்களை ஓட ஓட விரட்டிய புலிநிகர் தைமூர் கிளியாக வந்தவளிடம் கிறுகிறுத்து வீழ்ந்தான். சரித்திரத்தில் ஒளிந்துகிடந்த ஒரு சம்பவம்-இதுவே தைமூரின் வாழ்வின் இறுதி அத்தியாயமாக அமைந்திருந்தது.

புவனத்தைக் கவர்ந்த பூபதி தைமூர் பாதுஷாவின் தலைநகரமான சாமற்கண்டு சிந்தனையிலாழ்ந்திருப்பது போல அமைதியாக இருந்தது. புதிதாக எழுப்பப்பட்டிருந்த மசூதிகள் தைமூரின் கம்பீரத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. பவளத்தை உடைத்துத் தூளாக்கி தண்ணீரில் கலந்து மேகத்தில் தெளித்திருப்பது போலிருந்தது அன்றைய காலைச் செவ்வானம். அந்தக்காட்சி, தாதாரியாருக்கும் துருக்கியருக்கும் குஸ்துந்துனியாவில் நடந்து கொண்டிருக்கும் போர்க்களத்தின் பிரதிபிம்பம் போல் தோன்றியது. அந்த உக்கிரமமான போரில் பராக்கிரமத் தலைவனான தைமூரின் இறுதி அத்தியாயம் எழுதப்பட்டுவிடும் என்று அநேகமே நம்பிக்கொண்டிருந்தது. ஐதிகத்தில் பற்றுக் கொண்டோரும், ஆருடத்தில் வல்லவர்களும், குஸ்துந்துனியாப் போரில் தைமூர் வென்று விட்டால் உலகத்தில் நீதி அழிந்தது. தர்மம் இறந்தது’ என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

ஆனால் சாமற்கண்டு நகரத்தின் சாந்தமான தோற்றம், விரைவிலே மகத்தானதோர் வெற்றி நடந்தே தீரும் என்று அறிவித்துக் கொண்டிருந்தது. பகற் பொழுதின் மழலைப் பருவத்தில், பாதுஷாவின் அரண்மனையிலிருந்து மிதந்து வரும் அத்தர் வாடை அன்று அளவுக்கு மிறி நகரத்தை நறுமணத்தில் அமிழ்த்தி எடுத்தது.

“ரோஜாவில் உள்ள குளுமை மல்லிகையில் இல்லை. மல்லிகைக்குள்ள போதை ரோஜாவுக்குக் கிடையாது” என்று புலம்பிக் கொண்டே கொட்டாவி விட்டான் மசூதிக் காவலன். சலவைக்கல் திண்ணையில் சாய்ந்து கிடந்த அந்த சலித்த உடம்பையும் தைமூர் பாதுஷாவின் ஊதுபத்திப் புகை எழுப்பி உட்கார வைத்துவிட்டது. பழுப் பேறிப் போன பிராயத்தைப் பாடியே போக்க நினைத்து அல்லாவின் படிக்கட்டுகளிலே தவங்கிடக்க முடிவு செய்தவன் அந்தக் கிழவன். படித்துப் படித்துப் பைத்தியம் போல் மாறிவிட்ட அந்தப் புலமைக் கிழவன் தப்பித் தவறித் தாத்தாரியர்களுக்குக் கிடைத்துவிட்ட தத்துவச் சுனை. பொல்லாது பேசுவர் தள்ளாது வயதுடையோர்-என்ற ஆசியாக் கண்டத்துப் போலிச் சித்தாந்தத்தை அந்த மசூதிப் பெருங் கவிஞன் தினம் தினம் சாகடித்துக் கொண்டிருந்தான். சிரிப்புக்கோர் தத்துவம்! சினத்திற் கோர் தத்துவம்! சின்னவிழிக் கோர் தத்துவம்! அப்பப்பா! கண்ணில் பட்டதற் கெல்லாம் தத்துவம்! கவிதையிலேயே தத்துவம்! அந்தத் தத்துவ ஞானியைத் தான் அரண்மனை அத்தர் கிழக்கு வெளுக்குமுன் எழுப்பி விட்டது.

“தைமூர் பாதுஷா தாதாரியரின் தலைவன்; இந்தத் தரணிக்கே தலைவன்; லட்சோப லட்சம் சேனை வீரர்களின் சவங்களை பாஸ்பரஸ் நதியின் அலைகளிலே முட்டி மோதிக்கொள்ள வைத்த பராக்கிரமச் சக்கரவர்த்தி!”—கிழவன் புலம்ப ஆரம்பித்து விட்டான்.

களைப்புற்ற கட்டில் குமரி போல அமைதியுற்றிருந்த சாமற்கண்டின் தூக்கத்தைக் கலைத்த கிழப் புலவனின் குரல் கேட்டு ஈச்சமரத்தில் அடைந்து கிடந்த ஆந்தை கதற ஆரம்பித்தது.

“ஹ! ஹ! ஹ! ஆந்தை! அவலட்சணம் கதறுகிறது! ஹ! ஹ! நான் தைமூர்! நீ சக்தியற்ற உலகம்! கத்து! ஆவி உள்ளளவும் அலறு! தைமூர் அக்ரமக் காரன்! ராட்க்ஷசன்! சவமலை மேல் நின்று சமுத்திரத்தைப் பார்க்கிறவன்! மண்டை ஓட்டை மாலையாகப் போட்டுக்கொண்டு சண்டைக்கு வருவோரை மிரட்டிக் காட்டும் பூச்சாண்டி!—இப்படியெல்லாம் எவன் சொன்னான்? மானிட வர்க்கத்தின் ரத்த ஓட்டத்தை மலையருவியினின்று பிரியும் இன்பநாதம் என்று கருதுபவன் தைமூர் பாதுஷா. இதயத்தின் துடிதுடிப்பை ஆசைக் கனலின் ஜுவாலைக் கதிர்கள் என்று சொல்பவன் தைமூர் பாதுஷா! ஹ! ஹ! ஹ! தைமூர்! எம்குலத் தலைவா! நீயா கொடியவன்! நீயா பயங்கரவாதி! ஆந்தையே! நீ கதறு! உரக்கக் கதறு! கதறிக் கதறி விழி பிதுங்கிச் சாகப்போகிறாய்! அகத்திற்கேற்ற முகம்! முகத்திற்கேற்ற குரல்! குரலுக்கேற்ற உருவம்! ஆந்தையே!

ஹ! ஹ! மயிலும் பக்ஷிதான், குயிலும் பக்ஷிதான் நீயும் பக்ஷிதான்! ஹ! ஹ! தைமூர் பெயர் கேட்டு தொடை நடுங்கும் ராஜாக்களைப் போல நீயும் ஒரு கடைகெட்ட படைப்பு! ஹ! ஹ! ஹ! பாதுஷா! நீ தலைவன்! உலகத் தலைவன்! திறமை இருக்கும் இடத்தில் செல்வம், செல்வமிருக்கு மிடத்தில் அகந்தை அகந்தை இருக்கு மிடத்தி ஆசை! தலைவா! இது உல நீதி! நீ சர்வாதிகாரியில்லை நீ ஏதேச்சாதிகாரியில்லை! ஹ! அட அல்லா! வையகத் யாள வாரிசுரிமை கேட்கு பேடித்தனத்தை உன் செல்வ தவிடுபொடி யாக்கிவிட்டான் பல்லிடுக்கில் சிங்காதனங்க யும், பளபளப்பான வாள் நு யில் மணிக் கிரீடங்களையு அடுக்கி வைத்துக்கொண்டு அ லத்தையே ஏறிட்டுப் பார்த் நிற்கும் இரத்தக்கண் சிங்க தைப் பார்த்து ஈச்சமரத் ஆந்தை கதறுகிறதே! உனக் வேடிக்கையாக இல்லையா? ஒ வேளை குஸ்துந்துனியா யுத்த தில் தாதாரியச் சேனை சிதறடி கப்பட்டுவிடும் என்பதற்குமு கூட்டியே சாவோலை வாசி கிறதா?.....................ஹு ஹும்! ஹும்! நான் பைத்திய காரன்! நினைத்ததே தவ தைமூரின் இமைகள் மூடு வரை தரணியிலே தோல் யேது! தோல்வியேது! தோல் யேது! ஹ! ஹ! ஹ!”-கிழவ புலம்பிக்கொண்டே இருந்தா மேற்திசையிலிருந்து குதிரை படையின் குளம்பொலி கே டது. ஆந்தை முன்னைக் காட் லும் அதிகமாகக் கூச்சலிட்ட வெள்ளைத் தாடியை தடவி கொண்டே வெளியிலே ஓடி தான் புலவன். தாதாரியப்பு வெற்றி முழக்கத்தோடு கு துந்துனியாவிலிருந்து திரும் கொண்டிருந்தது. ஒவ்வொ குதிரையின் வாலிலும் இரண் துருக்கியச் சேனை வீரர்கள் க இழுத்து வரப்பட்டார்க “தைமூர் பாதுஷா! நீதி நம் கம்! தர்மம் நம் பக்கம்! வீரம் பக்கம்!”—என்று கதறி கிழவன். அவன் தொண் அடங்குவதற்கும் தாதாரி படை கோட்டைக்குள் நுழை தற்கும் சரியாக இருந்தது.

★

பாதுஷாவின் ராஜசபை ரத்தினக் கம்பளம் விரிக்கப் டிருந்தது. மின்னிடும் ர குண்டுகள் தூணுக்குத் தூ கொத்துக் கொத்தாகத் தெ கிக் கொண்டிருந்தன. ரத் தில் குளித்து, ரணகளங்கள் கண்டு மொத்தத்தில் ‘அரக்க என்று பெயர் பெற்றுவி தைமூர் பாதுஷா அனல் பொ யும் கண்களோடு அலைச் கொடுக்கும் மதயானை பே ராஜசபையில் வீற்றிருந்தா தோல்வியுற்ற துருக்கியப்பெ படையின் சார்பாக பிர சேனாதிபதி யஜ்தானி தைமூ சந்நிதானத்திற்கு அழைத் வரப் பட்டான். கைதிக் கூ டிலே நிற்கும் கவின்மிகு வத்தைப் பல முறை ஏற இ கப் பார்த்தான் பாதுஷா. சிந்தும் துருக்கியர் விழிகள் துளியளவும் அச்சமில்லை.

“யஜ்தானி!.........தை தையே துருப்புக்கள

— 11-ம் பக்கம் —

கொலை வழக்கு

★ இசையமுது ★

"......இந்த வழக்கு விசித்திரமானது; அதைவிட இவனது வாழ்க்கைக் குறிப்புக்கள்......"

—நீதிபதி தொடர்ந்து கூறிக் கொண்டிருந்தார் வழக்கின் சாரத்தை; வழக்கு முடிந்துவிட்டது. தீர்ப்புக் கூற வேண்டிய கட்டம்: நீதிபதி தன் அபிப் பிராயங்களைக் கூறிக் கொண்டிருந்தார். நீதிமன்றத்தில் அமைதி நிலவியது. அந்த அமைதியிலே 'அவனது' வாழ்க்கைக் குறிப்புக்களைத் தேடுவது போல் அங்கு கூடியிருந்தோர் விழிகள் எல்லாம் குற்றக் கூண்டில் இருந்த 'அவனை' மொய்த்தபடி இருந்தன. அவன் சிலை போலநின்றான். கடந்த இரண்டு மாத காலமாக வழக்கு நடைபெறும் ஒவ்வொரு நாளும் எப்படி நின்றானோ அதே நிலை! அவன் செய்த குற்றத்திற்குப் 'பரிசு' பெறப்போகும் இன்றுமா அந்த நிலை!

பரிசு...அவன் புரிந்த குற்றத்திற்குப் பரிசு என்ன, பொன்னாடையா போர்த்தப் போகிறார்கள். மரணம்! அதைவிடக் கொடிய தண்டனை இல்லாத காரணத்தினால் அதுதானே கிடைக்க வேண்டும். மரண வாயிலுக்குச் செல்லும் இந்த நேரத்திலும்தான் அவன் 'மரம்' போல நிற்கிறானே, ஒருக்கால் குற்றமற்றவனோ? அல்ல அல்ல! அவனே ஒப்புக்கொள்கிறான்; பின் குற்றம் சிறியதோ? அதுவுமல்ல, மனித இதயம் படைத்த எவனும் செய்யமாட்டான் அப்படி; செய்ததென்ன? செய்ததைக் கேட்கக்கூட அருவருப்பார் நல்லவர்! அத்தகைய கொடுஞ்செயல் புரிந்த அவனோ!

அவன் விழிகளில் ஊசலாடிக் கொண்டிருந்த அந்தப் பார்வை, அம்பு பட்ட மானாகவும்—இல்லை பாயும் புலியாகவும்—இல்லை வெறும் பாலை நிலத்தோற்றம்—ஈச்சமரத்தின் நிழல்களே இல்லாத பாலைவனம்!

இன்னும் சில வினாடிகளில் தீர்ப்புக் கிடைத்து விடும். 'ஜூரர்கள்' வழக்கின் சாரத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அதற்கு முன்னதாகவே மக்கள் தீர்ப்புக் கூறிவிட்டனர். "பாவி! பாதகன்!" என்றமுறையில்.

'திருமங்கை'—கொலை செய்துவிட்டான்—அவன் நண்பன் கண்ணப்பனின் மனைவி காஞ்சனையைக் கொன்று விட்டான். கொலை செய்த அளவோடு அவன் நிற்கவில்லை. கூறவே நா கூசும்! பிணமான அந்தப் பாவையைக் கூடிட முயன்றான். அதன் சின்னமாக இறந்துபோன அவள் உதட்டில் தன் உதடுகளைப் பதித்து வெறித்தனமாக மிருகம்போல் நடந்து கொண்டான்; இத்தனையும் அவளைப் பிணமாக்கி விட்டு, ஆமாம்! கெடுக்க முயன்று-அந்த முயற்சியிலே கொலை நடைபெறவில்லை. கொலை நடந்தபிறகே அனைத்தும் நடந்தது. டாக்டர்-போலீசார் - பார்த்தவர் அனைவரும் ஒருமுகமாகக் கூறியது இதுதான். அவன் ஒப்புக்கொண்டதும் இதைத்தான். நீதிபதிக்கு இந்த இடம்தான் சிக்கலாக இருந்தது. வழக்கு விசித்திரமாகத் தென்பட்டது. ஏன் அப்படிச் செய்தான்? ஏதும் கூற அவன் மறுத்து விட்டான். 'கொன்றது நான்தான்' "என் பசி...அவள் தூய்மை" இரண்டும் வாழ அதுதான் வழி" "அவன் கூறியது இந்த இரண்டு வரிகளைத்தான். ஒருக்கால் காஞ்சனைக்கும் இவனுக்கும் உறவுஏதேனும்...இல்லை இல்லை அப்படி ஏதும் இல்லை. கண்ணப்பனே இல்லை என்கிறான். 'மனைவி மாசற்றவள்—நண்பன் நல்லவன்' எனினும் நான் பார்த்தபோது அவன் அவளை கட்டாரியால் குத்தியதும் கட்டி அணைத்து முத்த மிட்டதும்" —கண்ணப்பனின் வாக்குமூலம் இது. வழக்குத்தொடர்ந்ததுகூட அவன் அல்ல-அரசாங்கம். கண்ணப்பன் உள்ளத்தில் இன்னும் 'திருமங்கை' நண்பன்தான்.

★

நீதிபதி தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தார். கண்ணப்பன்—திருமங்கையைப் பார்த்தான்—கண்கள் கலங்கியது. அவனோடு பழகிய நாட்கள் நினைவிற்கு வந்தது. அவனுடன் வாழ்ந்த நாட்களை நினைத்தான்—அவனது வாழ்க்கைக் குறிப்புக்களை—இதுவரை பலர் படிக்காததைக் கூட—அவன் படித்தவன். அதை யெல்லாம் எண்ணிக் கொண்டான். ஒரு கணம் உலகமே அவனுக்கு இருட்டறையாக இருந்தது.

சென்னைக் கோட்டை அலுவலகத்தில் இருவரும் பணியாற்றத் தொடங்கிய நேரம். 'தனிக் கட்டைகள்'—குடும்பம் இல்லை-விடுதியிலே உண்டு—வாடகை அறையிலே உறக்கம் கண்டவர்கள்.

பணி மனையிலே தொடங்கிய தொடர்பு நட்பாக உருவாகியிருந்த நேரம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. மாலை நேரம். தேனீர் சுவைத்துக் கொண்டிருந்தனர்—'சார் தந்தி' திருமங்கை தேனீரைச் சுவைத்தபடியே அதைப் பிரித்துப் பார்த்தான்.

ஒரு கணம் அவன் நிமிர்ந்துப் பார்த்தான். அந்தப் பார்வை—விளக்கம் காணமுடியாத அந்தப் பார்வை அடுத்த வினாடியே மறைந்தது. தொடர்ந்து தேனீரைச் சுவைக்கத் தொடங்கினான். கண்ணப்பனுக்கு என்னவோ போலிருந்தது. பொறுமை இழந்த நிலையில், "என்னப்பா! 'டீ' எங்கே போய்விடும்; தந்தியில் வந்த சேதி..."

திருமங்கை பேசவில்லை. தேனீரைச் சுவைத்தபடியே தந்தியைக் கண்ணப்பனிடம் நீட்டினான்.

தந்தியைப் படித்த கண்ணப்பன் திடுக்கிட்டான். "திருமங்கை"—கண்ணப்பன் உரக்கக் கத்திவிட்டான். அவன் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

"இறந்து போனது".

"என் மனைவி".

"உன்...உன்".

"ஆமாம் என் மனைவிதான்" கண்ணப்பன் இதயம் ஒரு கணம் தூள்தூளாக நொறுங்கியது. திருமங்கை அவனுக்கு ஓநாய்போலத் தெரிந்தான். தன் இதயத்தைக் கிழித்துக் கொண்டிருக்கும் ஓநாய்!

"திருமங்கை"—கண்ணப்பனின் குரல் வெடித்தது. "உன் மனைவி இறந்து போனாள்...நீ".

"ஒருத்தியா இறந்து போனாள்" திருமங்கை அமைதியாகத்தான் சொன்னான். ஆனால் கண்ணப்பனின் இதயம்?

"அப்படியென்றால்" கண்ணப்பன் தன்னையும் அறியாமல் கேட்டான். ஆமாம். அதற்குப்பிறகுதான் அவன் கதையே இவனுக்குத் தெரிந்தது.

திருமங்கை-இளமையிலேயே தந்தை இழந்தவன்-தாயின் மடியில் வளர்ந்த அவன் எத்தனையோ தொல்லைகளை சந்தித்தான்-பின் அவன் வாழப்புகுந்த நேரத்தில் அவன் சந்தித்த இன்னல்கள்—அப்பப்பா! படித்து முடித்து வேலை கிடைத்த சமயம் அவன் ஒருத்தியை காதலித்தான். இவனைவிட உயர்குலம்! காதலுக்கு சமூகம் விதித்த பல தடைகள் சந்தர்ப்பம் வைத்த தேர்வுகள், தாயின் கண்ணீர் வைதிகத்தின் உறுமல் எப்படியோ எல்லாவற்றையும் சமாளித்தான். இறுதியில் வெற்றியும் பெற்றான். ஆனால் அந்தவாழ்வு! தன் வாழ்வே அவள் என்று எண்ணியிருந்த அவன் இதயம் பாழாகியது. ஆமாம் அவன் நாகம் தீண்டி மாண்டாள். மூன்று மாதம் உணவு உறக்கமின்றிக் கிடந்தான். சமூகம் இவனுக்கு நீதி போதித்தது, 'சாஸ்திரத்திற்கு விரோதமாய் நடந்தாய். அதன் பலன் இது' என்று கூறியது. அவனோ பைத்தியக்காரன் போல இருந்தான்.

காலம் ஓடியது. நான்கு மாதத்திற்கெல்லாம் இவன் விதவைக் கோலம் நீங்கியது. மீண்டும் மண மேடை ஏறினான் புரோகிதர் எதிரில். சுந்தரி இவன் மனைவியானாள். மறு மாதம் அந்த நாள் வரவில்லை. ஆமாம்! அவளும் பிணமானாள். பெரியம்மை பலி கொண்டது. மீண்டும் கறுப்புடை. உலகம் அவனுக்கு வேம்பாகத் தெரிந்தது. அருணகிரியும்--பட்டினத்தடிகளும் வாழ்க்கை வழிகாட்டிகளாகத் தெரிந்தனர். விதியும்-யாக்கை நிலையாமையும் அவன் தத்துவமாகியது. தாயுமானவர் கிளிக்கண்ணி — அகநானூற்றை விட இனித்தது.

காலம் ஓடியது. அவன் தாயின் கண்ணீர் நின்றது. ஆமாம்! மீண்டும் திருமண அழைப்பிதழில் அவன் பெயர் தெரிந்தது. முதலில் அவனுக்கு கூட வெறுப்பாகத் தானிருந்தது. எனினும் என்ன இருபத்தினான் கிலேயே துறவியாகிவிட முடியுமா?

அவனும் சரி என்றான்—மீண்டும் 'அகநானூறு' திறக்கப்பட்டது.

மரகதம் அவன் மனதைக் கவர்ந்த நேரம்—அவள் உடலைக் காசநோய் கவர்ந்தது-கவ்வியது.

அவள் இருமுகின்ற ஒலி திருமங்கையின் இதயத்தில் தன் மாஜி மனைவிகளின் உருவம் தெரிந்தது.

நோய் வளர்ந்தது. அவள் வயிற்றில் இருந்த கருவும் வளர்ந்தது. இந்த நிலையில் கூற வேண்டுமா அவள் நிலையை!

உலகத்தின் வேதனைக் குரல் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒலிக்கும்-இருமலாக! இதனிடையில் இவன் சென்னைக்கு வர நேர்ந்தது. வந்தநாள் முதலாக இவன் எதிர்பார்த்த சேதிதான் இன்று கிடைத்தது.

திருமங்கையின் வாழ்க்கைச் சுவடியை அன்றுதான் படித்தான். கண்ணப்பன் அன்றிலிருந்து திருமங்கையின் வாழ்க்கைச் சுவடியை இவனே எழுதத் தொடங்கிவிட்டான்.

திருமங்கையின் தாய் மீண்டும்

— 8-ம் பக்கம் —

தோழர் இசையமுது, சென்ற ஆண்டு தென்றல் நடத்திய இலக்கியப் போட்டியில் கலந்து கொண்டு, 'கல்லக்குடி' என்ற பெருங்கதை ஒன்று எழுதிப் பரிசுப் பெற்றவர். சமுதாயத்தின் அழிவுச் சக்திகளைச் சாடும் புதுமைச் சிறு கதைகளை எழுதுவதிலே தணியாத ஆர்வங் கொண்டவர். இந்த இதழில் வெளிவந்துள்ள கதையில் ஒரு கொலை வழக்கைச்சுவைபட நடத்திக் காட்டியிருக்கிறார்.—ஆ-ர்.



தென்னாட்டு முஸ்லீம் திராவிடனே!

★ சென்னைக் கலைக் கல்லூரியில் கண்ணதாசன் ★

சென்னை அரசினர் கலைக் கல்லூரி மாணவர் இல்லத்தின் சார்பில் திரு. சையட் சப்தர் உசேன் எம். ஏ., எல். டி. அவர்கள் தலைமையில் நபிகள் நாயகம் விழாக்கொண்டாடப்பட்டது. செயலாளர். தி. இரா. சனார்த்தனன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. காதர்சேட் எம். ஏ., அவர்கள் சொற்பொழி வாற்றிய பின்னர், ஆசிரியர் கண்ணதாசன் நீண்டதொரு சொற்பொழிவாற்றினார். அந்தப் பேச்சின் ஒரு பகுதி இது:

"இன்று நாம் நபிகள் நாயகம் விழாவில் கலந்துகொள்கிறோம். இவ்விழாவிற்கு உங்கள் செயலாளர் அழைத்தபோது, மாணவர்களிடையே கருத்தைப் பரிமாறிக்கொள்வது பற்றி மகிழ்ந்தேன். பத்தாயிரம் மக்கள் இருக்கும் கூட்டத்தில் பேசுவதைக் காட்டிலும் மாணவர் கூட்டங்களில் பேசுவதால், நாம் கருத்தைப் பரிமாறிக்கொள்ளவும், நம் கொள்கை பலரிடம் சென்று கூறப்படவும் வசதியேற்படுகிறது. அதனாலேயே பொதுமக்களைக் காட்டிலும் மாணவர்கள் பெரியவர்களாக இருக்கிறார்கள்.

"தமிழ்நாட்டைப்பொறுத்தமட்டில் முஸ்லீம்களும், இந்துக்களும் மிகவும் ஒற்றுமையுடனே இருக்கிறார்கள். வடநாட்டைப்போல் இங்கு இவர்களுக்குள் வேற்றுமை வளரவில்லை. இன்றும் முஸ்லீம்களும் அவர்கள் அல்லாதவர்களும், தமிழ்நாட்டில் ஒற்றுமையுடன் இருக்கிறார்கள்; அன்றும் அவ்வாறே இருந்தார்கள். இந்து - முஸ்லீம் பேதமற்ற நிலையைத் தமிழ்நாட்டில் காண்கிறோம். இங்குள்ள யாரைப் பார்த்தும் அவர் முஸ்லீம் என்றோ இந்து என்றோ கூறிவிடமுடியாது. உன் பெயர் என்ன? என்று கேட்டு அவன் 'காதர்' என்றால், ஓகோ! இவன் முஸ்லீம் என்று பின்புதான் கூறவேண்டும். அவ்வாறு வேற்றுமையின்றி வாழ்கிறோம்.

"ஒரு காட்டில் ரோஜா மலர் மட்டும் இருப்பது அழகல்ல. மல்லிகையும் வேண்டும். இன்னும் பிறபல மலர்களும் இருப்பதே, காட்டிற்கு அழகு. ஆனால் தமிழ்நாட்டைக் காட்டிற்கும் இங்கு உள்ள மதங்களை மலர்களுக்கும் ஒப்பிடமுடியாது. இங்குள்ள முஸ்லீம்களை மல்லிகை மலர் என்றோ, தமிழர்களை ரோஜா மலர் என்றோ கூறிவிட முடியாது. எல்லோரும் ரோஜா மலர்களே! கிருத்துவ மதத்தவர்களும் ரோஜா மலர்களே! இந்த மலர்களின் கொடிகளிலும், காம்புகளிலும் வேற்றுமை உண்டு. அவை நிறம் மாறி இருக்கின்றன. கொள்கை உணர்ச்சியளவில் மாறுபாடு உடையவர்கள். ஆயினும் ஒரே, திராவிட இனத்தவர்கள்.

"முகமதிய மதத்தவர்கள் தங்கள் மதத்தின் முறைமையாகத் தொப்பியை அணிந்துகொள்கிறார்கள். அதைக் கொண்டே அவர்களை முகமதியர்கள் என்று சுட்டிக்காட்ட முடிகிறது. ஏனென்றால் இங்குள்ள முகமதியர்கள் எல்லோரும் நம்மவர்கள்; நம்மிலிருந்து முகமதியராகவும், கிருத்துவராகவும் மாறியவர்கள். இங்குள்ள எந்த முகமதியனைப் பார்த்தும், அரேபியாவிலிருந்து ஆறு மாதம் பயணம் செய்துவந்தவனென்றோ, எகிப்திலிருந்து எட்டு மாதப் பயணம் செய்து வந்தவனென்றோ கூறமுடியாது. இந்து மதத்திலிருந்து வெளியேற வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது வெளியேறி, வேறு மதத்தில் நம்பிக்கை வைத்தார்கள். அந்த நம்பிக்கை அசையா நம்பிக்கையான காரணத்தால் அங்கேயே தங்கிவிட்டார்கள்.

"நாங்கள் யாருடைய உணர்ச்சிகளையும் புண்படுத்துவது கிடையாது. இவ்வேளை நான் உங்களுக்கு ஓர் உண்மையைச் சொல்லுவேன். இந்து மதத்தில் நாங்கள் வெறுப்புக் கொண்டோம். தெய்வ விக்ரகங்களையும் கண்டித்தோம். எங்களில் சிலர் விக்ரகங்களை உடைக்கின்ற முறையைக் கையாண்டார்கள். நாங்கள் விக்ரகங்களை வழிபடும் மனிதர்களை அன்பால் வெல்ல முயன்றோம். விக்ரகங்களை உடைப்பதால் கோபத்தையே நாம் பரிசாகப் பெறுவோம். அதற்கு மாறாக, நல்ல விளக்கங்களை அவர்களுக்குத் தரலாம். திராவிடர்களும் முஸ்லீம்களும் இன்று அன்பாக இருக்கிறார்கள். வடக்கே முஸ்லிம்களும், மற்றையோரும் பகை கொண்டுள்ளார்கள். காந்தியார் கொலை செய்யப்பட்டவுடன் அவரைக் கொன்றது ஒரு முஸ்லீம் எனக் கருதப்பட்டு முஸ்லீம்கள் அங்கு தாக்கப்பட்டார்கள். உண்மையாகவே, ஒரு முஸ்லீமே காந்தியாரைக் கொன்றிருந்தாலும் தமிழ்நாட்டில் முஸ்லீம்களும், தமிழர்களும் சேர்ந்து, வருத்தப்பட்டிருப்பார்களே தவிர, ஒரு இந்து ஒரு முஸ்லீமைத் தாக்கியிருக்கமாட்டான். காரணம், இங்குள்ள தமிழர்களும் முஸ்லீம்களும், ஒரே இனத்தவர்கள். ஒரே தாயின் கருவில் வளர்ந்தவர்கள். காலம் வேண்டுமாயின் மாறுபட்டிருக்கலாம். எல்லோரும் தமிழ் அன்னையின் புதல்வர்கள்.

"மத தர்மத்திற்காக என, தனிப்பட தமிழ்நாட்டில் ஏற்பட்ட கட்சி நீங்கி ஏனைய கட்சிகளைப் பார்த்தால் அங்கு இந்து-முஸ்லிம் என்றபேதம் இருக்காது. புனைபெயரிலேயே முகமதியர்கள் அங்கு நடமாடுவார்களே ஆயின் வேறுபாடு காண முடியாதே போகும்.

"நாங்கள் சீர்திருத்த வாதிகள். உள்ளத்தில் ஊறிக்கிடக்கும் உண்மைக் கருத்துக்களையே கூறுவோம். அதனாலேயே நபிகள் விழா வாயினும், ஏசு கிருஸ்து விழா வாயினும் அழைத்தால் தயங்காமல் செல்கிறோம். புத்தர் விழாவிற்குச் செல்கிறோம் என்றால் அவருடைய எல்லாக் கருத்தையும் ஒத்துக் கொண்டோம் என்ற நிலையில் செல்வதில்லை. அவர் மக்களுக்காக உழைத்திருக்கிறார். அதைப் பாராட்டுவோம் என்று செல்கிறோம். சிலர் கருதலாம். ஏசு, நபி, புத்தர் விழாவென்றால் செல்கிறார்களே எங்கள் கிருஷ்ண ஜெயந்திக்கு வரக்கூடாதா? என்று அழைத்தால் அங்கும் போவோம். எங்கள் கருத்தையே அங்கும் சொல்வோம். வேண்டுமானால் இந்த விழாக்களில் பெறாத சுகானுபவம் அங்கே பெறலாம். நபியும், புத்தரும், ஏசுவும் தங்களோடு 300 கோபியருக்கு வேலை வைக்கவில்லை!

"நபி, நாட்டு மக்களுக்காக வாழ்ந்தார். முகமதியர்கள் நபியைக் கடவுள் என்று அழைப்பதில்லை. கடவுளின் தூதர் என்றே கூறுகின்றனர். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்" என்பது தானே குறள் வாக்கு! முகமது நபி வாழ்வாங்கு வாழ்ந்தார்.

"முகமதிய மதத்தவர்கள் நபியை வாழ்த்துவதற்கும் நாங்கள் வாழ்த்துவதற்கும் வேறுபாடு நிச்சயமாக உண்டு. அவர்கள் பக்தியால் வழிபடுவார்கள். நாங்கள் அன்பால் கொண்டாடுவோம். முகமது நபி உயர்ந்தவர். சிறந்த தலைவர். இன்னல் பல ஏற்றார். மரியாதை செலுத்தவேண்டியவர் என்று நாங்கள் சொல்வோம்.

"நபி கூறியதாக ஒன்று சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அமைதியைக் காக்கக் கொல்லாமையைப் போதித்த வேளையில் கொலையும் புரியலாம் என்று கூறி, 100 பேர்களுக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்தால் 100 கோழிகளைக் கொல்வதைக் காட்டிலும் 10 ஆடுகளைக் கொன்றால் 90 உயிர் பிழைக்கிறது; 10 ஆடுகளைக் கொல்வதைக் காட்டிலும் 1 மாட்டைக் கொன்றால் 99 உயிர்கள் பிழைக்கும், என்று கூறியுள்ளாராம். அது உண்மையானால் அது எத்தகையதொரு கம்யூனிச வாதம்! இதைக் கொண்டு நபியை நான் ஒரு பொதுவுடைமை வாதியென்பேன். அப்படி இந்தக் கொள்கை முகமதிய மதத்தில் இல்லையென்றால் நமது மதத்திலாவது ஏற்படுத்திக்கொள்வோம்! பொருளாதார அடிப்படையில் பார்த்தால் 1000 தொழிலாளியிடம் ரூ 8 வீதம் 8000 வரி வாங்குவதைக் காட்டிலும், ஒரு பணக்காரன் வயிற்றில் அடித்து 8000 பறித்தால் 1000 தொழிலாளிகளுக்கு தலைக்கு, ரூ 8 கொடுத்தவர் ஆகிறோம். இக்கருத்து உயர்ந்த கருத்து என்பேன்.

"நான் குரான் படித்துள்ளேன். அதிலிருந்து நிறைய மேற்கோள் காட்டத் தற்போது நினைவு வரவில்லை. எப்போது எங்கே, என்னை நீ அழைத்தாலும் அப்போது அங்கே நானிருப்பேன், என்ற கீதையின் தத்துவம் போலில்லாமல், எப்போது நம்மை நாம் திருத்திக்கொள்வோமோ, அப்போது ஆண்டவன் உளன் என்று கூறுகிறது குரான். இத்தகு கருத்துக்களால் குரான் பாதுகாத்து வைத்துக்கொள்ளத் தக்க நூல்.

"நமக்கு வாழ்க்கை வழி வகுத்ததால் குறளையும், அறநெறி போதித்தமையால் சிலப்பதிகாரத்தையும், அன்பையும், நன்னெறியையும் புகட்டியமையால் மணிமேகலையையும் போற்றுகிறோம். எங்களுடைய மார்க்கம் அன்பு மார்க்கம். மதத்துக்காரர்களது மார்க்கம் பக்திமார்க்கம். நாங்கள் உள்ளம் வயப்படுகிறோம். அவர்கள் உடல் வயப்படுகிறார்கள். இன்று சில மதத்தலைவர்கள் பேச்சைக் கேட்கும்போது அவர்கள்கூட மாறி வருதலை அறிகிறோம்.

"நாம் எல்லோரும் தமிழர்கள். திராவிட இனத்தவர்கள். நபி நாயகம், வள்ளுவர், புத்தர், ஏசு போன்றோர் கூறியவற்றில் நல்லன என நமக்குப் பட்டவற்றைப் பின்பற்றி ஒன்றுபட்ட வாழ்வு வாழ்வோம். நன்றி"

—இதன்பின் செயலாளர் நன்றி கூறினார். கூட்டம் இனிது முடிந்தது.

தம்பி! முழக்கிடடா!

★ ப. தாமரைச் செல்வன் ★

சங்கம் வளர்த்தவர் நாட்டினி லேஇன்று
தங்க இடம் இலையே—வளம்
எங்கும் நிறைத்தவர் வாழ்வினிலே இன்று
எண்ண நிலம் இலையே—அலை
பொங்கும் மணிக்கடல் காவலி லேஇன்று
பொன்னி புலம்பு தடா!—இவர்
எங்கும் நிறைந்தவர் எங்கும் வளர்ந்தவர்
என்று முழக் கிடடா!

ஆண்ட இனந்தனை அண்ட நுழைந்தவர்
அடிமையாய் ஆக்குவதோ!—நாம்
தீண்டும் நிலந்தனில் வாழ்ந்திட வந்தவர்
தென்றலை ஒட்டு வதோ!—நம்
மாண்ட பழங்கதை மீண்டும் வளம்பெற
வந்து முழக் கிடடா!—நீ
தாண்டும் புலத்தினைத் தக்கவர் வாழ்ந்திடத்
தந்து முழக் கிடடா!

வந்து நுழைந்தவர் வாழ்வினில் நம்மவர்
வதைந்திட வாழு கிறார்—நம்
சிந்தை யெலாமொரு தீச்சுடர் வானெனச்
சேதி முழக் கிடடா!—நம்
நொந்த இனத்தினர் நுட்ப முணர்ந்திடல்
நூறு இணைச்சுடராம்—தம்
தந்தை நிலம்பெறத் தானை நிறைக்கிறார்
தம்பி! முழக் கிடடா!

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 ‖ 3—11—56 ‖ இதழ் 10

இஸ்ரேல் வெறி

மத்தியக் கிழக்குப் பகுதியில், ...க்ரமிப்புகளும் எதிர் நடவடிக் ...கைகளும் துவங்கிவிட்டன. சூயஸ் ...ால்வாயை, எகிப்து,தேச உடைமை ...க்கியதிலிருந்து மத்திய கிழக்கில் ...ளம்பிக் கொண்டிருந்த புகை, ...டீரென்று எதிர்பாராத உருவத் ...ில் கனலைக் கக்கிவிட்டது. சூயஸ் ...ல்லையோரங்களிலும் எகிப்துக் ...ச்சிறிது தூரத்திலும்,பிரிட்டனும், ...ிரான்ஸும் படைகளைக் குவித்த ...பாது, போர்மூண்டால், இவ் ...ின்ன கட்சிகள் எதிரெதிராக ...ளங்கும் என எதிர்பார்த்த, அர ...யல் பற்றற்ற வட்டாரங்களிலே, இந்த யூதத் தாக்குதல் திகைப்பை ...ளித்திருக்கிறது. எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே உள்ளூர இருந்த பகை உணர்ச்சியை நேரடி ...டவடிக்கை மூலம் வெளிக் ...காணர்ந்த குற்றம் இஸ்ரேலைத் ...ான் சாருகிறது. சுற்றுச் சார்பு ...னக்குச் சாதகமாக இருக்கும் ...ன்ற நம்பிக்கையிலேயே இஸ்ரேல் இந்தப் போரைத் துவங்கியுள்ளது. ...ிரிட்டன், பிரான்ஸ், யு. எஸ். ...வற்றிற்கு, எகிப்தின் மீது கடும் ...ிரோதம் இருக்கிறது என்பதைச் ...ாதகமாகக் கொண்டுதான் இஸ் ...ரல் இவ்வளவு துணிவாக இறங்கி ...ள்ளது. ஆனால், இந்தத் துணிவு இஸ்ரேலின் அழிவுக்கு ஏற்பட்ட ...ணிவே தவிர, வளர்ச்சிக்கல்ல. ...கிப்திய மக்கள் தலைவன் நாசர், ...ூயஸ் கால்வாய்க் கப்பல் போக்கு ...ரத்துபற்றி எல்லா நாடுகளுக்கும் ...ந்த வாக்குறுதியையும், அதை ...ம்மியும் பிசகாது கடைப்பிடிப் ...தையும் யாரும் பாராட்டுவார்கள். இஸ்ரேல் விஷயத்திலும் அது ...ாதிரி ஒரு வாக்குறுதியை நாசர் ...ளித்திருந்தார். அப்படியிருந் ...ம் யூதர்கள் இந்தத்தாக்குதலைத் ...ுவங்கியிருக்கிறார்கள் என்றால், அக்கிரமமான இந்தச் செய்கையை ...ல்லறிவும், உலக சமாதானத்தில் ...ம்பிக்கையும் கொண்டோர் கண் ...த்துத்தான் ஆகவேண்டும். "கடல் ...ிமான மார்க்கங்களில்" எகிப்து இஸ்ரேலைத் தாக்கியதாகவும், ...தற்குப் 'பதிலடி' தான் இந்தத் ...ாக்குதல் என்றும் இஸ்ரேல் ...றும் சமாதானம், நம்பக்கூடிய ...ல்ல எங்கு, எப்பொழுது, எகிப்து இஸ்ரேலைத் தாக்கியது என்கிற ...செய்தியும் இல்லை; இஸ்ரேல் ரேடி ...யாக் குறிப்பிலும் அறிக்கையிலும் ...து குறிப்பிடப்படவுமில்லை. அக் ...ிரமமான தனது செயலுக்கு அனு ...ாபத்தைத் தேடிக்கொள்ள குற் ...ச்சாட்டை எதிரிகள்மீது வீசும் ...ழைய-புளித்துப்போன மடத்தன ...ான ராஜ தந்திரத்தைத்தான் இஸ்ரேல் கையாளுகிறது. எப்படி ...ிருப்பினும், எகிப்தின்மீது இஸ் ...ரேல் தொடுத்திருக்கும் இந்தப் போரை, மத்தியக் கிழக்கின் தனிப் பட்ட விவகாரம் என்று விட்டுவிட முடியாது. மக்கள் சக்தியின்மீது ஏகாதிபத்தியக் கணைகள் வீசும் கனல்தான் இது. உலகெங்கிலும் உள்ள இடது சாரிகள் அனைவரின் அனுதாபமும் நாசருக்கிருக்கிறது. அதேபோல் அவர்களது முழு மூச்சான எதிர்ப்பும் கண்டனமும் இஸ் ரேல்மீது பாயவேண்டும்.

இதே நேரத்தில் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் பேசிய அந்தோனிஈடன் இரு நாடுகளுக்குமே எச்சரிக்கைவிட்டிருக்கிறார் அதாவது 12 மணி நேரத்திற்குள் இரு நாடுகளும் போரை நிறுத்தாவிட்டால், படை பலத்துடன் தலையிடுவோம் என்று முழங்கியுள்ளார். இரண்டு நாடுகளும் இந்த எச்சரிக்கையைக் கண்டு போரை நிறுத்திவிடும் என்று நாம் நினைக்கவில்லை. ஒருவர்நிறுத்தும்போது மற்றவரும் நிறுத்துவர் என்பது என்ன நிச்சயம்? இந்த அவநம்பிக்கையில் இரண்டு நாடுகளும் சிறிய அளவிலாவது மோதிக்கொண்டு தான் நிற்கும். ஈடன் சொன்னதுபோல, படை பலத்துடன் தலையிடுவதல்ல, போரை நிறுத்த வழி. "நீங்கள் கம்பால் சண்டை போடுவதை நிறுத்துங்கள்; இல்லையென்றால் நான் கத்தி எடுத்துக் குத்துவேன்" என்பதுபோல் இருக்கிறது ஈடன் பேச்சு. இது சரியான ராஜதந்திரமல்ல. யார் வல்லடித் தாக்குதல் நடத்தியது என்பதைக் கண்டு, அவர்களை ஒரு முகமாகக் கண்டிப்பதும் முடிந்தால், அவர்களை மட்டும் படை கொண்டு தடுப்பதும்தான் சரியாகும். இந்த நேரத்தில் நியாயம் எகிப்தின் பக்கம்தான் இருக்கிறது. ஐ. நா. மூலமாகவோ, முக்கூட்டு நாடுகள் தாமாகவோ, அல்லது யு. எஸ். இப்பொழுது ஆச்சரியப் படுவதுபோல், மேலும் ஆச்சரியப் பட வைத்துவிட்டு பிரிட்டனும் பிரான்ஸுமோ, எகிப்துக்கு இந்தப் பிரச்சினையில் கை கொடுப்பதுதான் நியாயமாகும். அப்போது தான் அந்த நாடுகளின் கண்ணியமும் காப்பாற்றப்படும். சூயஸ் பகுதியிலிருந்து எல்லாத் துருப்புகளும் வாபஸாகி யாகவேண்டும், அதே நேரத்தில் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் பேசிய யு. எஸ். பிரதிநிதி ஹென்றிலாட்ஜ் குறிப்பிட்டது போல், இஸ்ரேல் படைகளுக்கு 'சப்ளை' அனுப்புவதை ஐ நா. மெம்பர்கள் உடனே நிறுத்த வேண்டும் மிக எச்சரிக்கையான ராஜ தந்திரத்தின் மூலமும், நியாயத்தை மதித்து நடப்பதின் மூலமுமே, இந்தப் புதிய சிக்கலைத் தவிர்க்க முடியும்.

—கண்ணதாசன்.

காரை முத்துப் புலவர் எழுதும்

தேர்தல் நவரசம்

ஆடுபவர் : **குமாரி காங்கிரசு**
நட்டுவனர் : **விருதுநகர் காமராசர்**
வயலின் : **கக்கன்**
மிருதங்கம் : **டி. டி. கிருஷ்ணமாச்சாரி**
மேடை : **தமிழ்நாடு** ஆடை : **அரை நிர்வாணம்**

1. சிங்காரம்

[ஒரு லட்சாதிபதி; தொந்தி சரிந்து பாதத்தை மறைக்க, பத்து விரல்களில் மோதிரம் பளிச்சிட, வழுக்கைத் தலையில் சில சில ரோமங்கள் ராஜ பார்வை பார்க்க, கழுத்திலே போட்ட சரிகைத் துண்டு காலில் புரளக் காட்சி தருகிறார். குமாரி காங்கிரசு, குந்தாணி இடையில் முந்தானையை இறுக்கிய வண்ணம், கோர வதனத்தில் காதல் ரசத்தைப் பிழிந்த வண்ணம், முன் வந்து வணங்குகிறாள். நட்டுவனர், காமராசர்,சால்ராவைத் தட்டித் துவங்க...நடனம் துவக்கம்.]

இசை : **பசை**
தாளம் : **கூளம்**

சிங்காரன் இவன் யாரடி !—எங்கும்
செங்காங்கடை வளர்த்த ஓமானே பூமானே (சிங்)
பங்காரு சாமிக்குப் பாலாபிஷேகம் செய்து
பதினுயிரம் குடியை ஒருநாளிலே கெடுத்த (சிங்)
கங்காருபோல் முகத்தில் களை சொட்டுதே !—இவர்
காணாத காட்சியில்லை எனச் சொல்லுதே !
இங்காவது ஒழுங்காய் இருப்பாரா ?—தேர்தலில்
எனக்கென்று ஒருலெட்சம் கொடுப்பாரா ? பூதச் (சிங்)
படுத்த படுக்கை இன்னும் சுருட்டவில்லை—நேற்றுப்
படுத்தவர் காலைவரை இருக்கவில்லை !
அடுத்தவர் இவரென்ற ஆசையிலே இருந்தேன் !
படுக்கைக்கு வருவாரா ? பணம்அள்ளித் தருவாரா (சிங்)
ஒருத்தனிடத்தில் நானும் ஒழுங்கா யிருந்ததில்லை—எந்தன்
உண்மைக் கணவனிடம் ஒருநாளும் வாழ்ந்ததில்லை !
நிறுத்துப் பணத்தை அள்ளிவிட்டவர் எவரேனும்
நேரில்வந்தால் கதவைத் திறந்திடுவேன் ! சொல்வாய் (சிங்)

[லட்சாதிபதி, தன் பணச் சிறப்பைப் பத்து விரல்கள் மூலம் காட்டுகிறார். குமாரி குனிந்து கொடுத்து வளைந்து நிமிர்ந்து.........]

— இது வேறு —

வாங்க மச்சான் வாங்க—தேர் தல்
வருது ! அள்ளித் தாங்க !
தூங்கித் தூங்கி நீங்க—ஏன்தான்
தொந்தி வளக்கு றிங்க ! (வாங்
திருப்பத்தூருத் தொகுதியிலே நீங்க நிண்ண போதும்
திரும்பி நாங்க பாக்கமாட்டோம் போட்டிபோட மாட்டோம்
ஜெயித்து வந்த உடனே எம்மைச் சேர்ந்து சுகம் காண
சிரித்துக்கொண்டே பள்ளியறை அழைத்துச் செல்வோம் நாங்க ! (வா)

[இப்படி ஆடியதும், திருவாளர் தொந்தியாதிபதி குஷியாகி விடுகிறார். எழுந்து, ஆடிப் பாடுகிறார்...]

— இது வேறு —

மொச்சைபோல் பல்லழகி......
முறம்போன்ற காதழகி.........
குந்தாணி இடையழகி...!
கோரமுகப் பெண்ணழகி......
தேடி வந்தானே இந்த யானை—பொதுத்
தேர்தல் வருவதால் தானே ! மானே ! (தேடி)
கோடிப் பணம் தாரனே ! கொடுக்கிறேன் இந்நேரமே !
கொள்கையாகும் குறியினை இழந்து
கொள்ளை கொள்ளும் நினைவினில் உன்னைத் (தேடி)

[இருவரும் கைகோர்த்து ஆடுதல்.]

—— அடுத்த இதழில் ——
இரண்டாவது ரசம்
நகை

குலோத்துங்கன் தீட்டும் கலிங்கத்துப் பரணி!

ஒரு காலத்தில் கழுதைமேல் உட்கார வைத்து ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு அவமானப் படுத்தப்படுவோர். இன்னொரு காலத்தில் யானைமேல் பவனி வருவர். ஒரு காலத்தில் எடுபிடிகளை ஏவி எதிர்க்கட்சியினரைத் தீர்த்துவிட எண்ணுவோர், இன்னொரு காலத்தில் அதே எதிர்க்கட்சியினருக்கு மாலை போட்டு மகிழ்விப்பர்.

முதல் ஆண்டு தடையுத்தரவு பிறப்பித்தோர் மறு ஆண்டு தாழ் பணிந்து கிடப்பர். 'ஒழித்துவிட்டோம்' என்ற பெருமிதம், 'சிக்கிக் கொண்டோம்' என்ற பெருமூச்சு நிலைபெறும்.

–காலத்தால் விளையும் இப்பேர்ப்பட்ட திருவினைகள் அரசியலில் நிறைய உண்டு. அதுவும் இந்தியத் துணைக்கண்டத்து சரித்திரத்தில் இதுமாதிரியான ரசமான சம்பவங்கள் ஏராளமாக நிகழ்ந்திருக்கின்றன. வெள்ளையர் காலத்தில் பதவியிலிருந்த இந்தியர்கள், காங்கிரசார் காலத்தில் 'பிராயச்சித்தம்' பெற்றுக்கொண்டார்கள். அவர்களின் அந்தப் பிராயச்சித்தம் காங்கிரசாருக்குப் படிப்பினையாகும் என்று இடதுசாரிக் கட்சியினர் எதிர்பார்த்தார்கள். ஆனால் காங்கிரசார் காலத்திலே காங்கிரசாரே 'பிராயச்சித்தம்' தேடிக்கொள்ளும் கவின்மிகு காட்சியைப் பார்க்கமுடியும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

கேரளத்தோடு இணைந்திருக்கும் தமிழ்ப்பகுதி தமிழகத்தோடு சேர வேண்டு என்று நாஞ்சில் தமிழர்கள்–தூயஉள்ளம் கொண்ட தமிழர்கள் விரமுழக்கம் செய்தனர். அப்போது குத்துவெட்டு என்று கிளம்பிய குருட்டு நெஞ்சினருக்கு இலட்சியத் தமிழர்களின் இரத்தம் காணிக்கையாக வடிக்கப்பட்டது. குண்டடியும், குண்டாந்தடியின் பெருந்தாக்குதலும் விடுதலைகோரிய நாஞ்சில் தமிழர்களுக்கு 'மனமுவந்து' அளிக்கப்பட்டன. அப்போதெல்லாம் தமிழ்நாட்டுக் காங்கிரசார் நாஞ்சில் தமிழருக்கு விரோதமாக இருந்தனர். ஆனால் இப்போது? காலம், நேத்திரங் கெட்டோரின் கண்களைத் திறந்துவிட்டிருக்கிறது. குமரிமுனை தமிழகத்தோடு சேர்க்கப்பட்டு நவம்பர் முதல் தேதி விழாக் கொண்டாடுகிறார்கள். காமராசர் போயிருக்கிறார் விழாவை நடத்திவைக்க! எந்தக் காமராசர்? ஒரு காலத்தில் நாஞ்சில் தமிழர்களின் உள்ளங்களைப் புண்ணாக்கிய காமராசர், நாகர்கோயில்வடசேரியில்நாயினும் கேடாக நல்ல தமிழ்க் காவலர்கள் புடைக்கப்பட்டபோது' நமக்கென்ன' என்று இருந்த காமராசர், 'தமிழ்நாடு' என்ற 'திருநாமத்தை'ப் பறிகொடுத்துவிட்டு தமிழர்களின் 'வாழ்த்துதலை' நாள்தோறும் பெற்றுக்கொண்டிருக்கும் காமராசர் – அவர்தான் போயிருக்கிறார் விழாவினை நடத்திவைக்க! "பிரதமர் வருகிறார்! பிரதமர் வருகிறார்!" என்று பிரமாதமாக வரவேற்பு விழா நடத்துவார்கள். யார் அவர்கள்? போலீஸ் அதிகாரிகளும் அவர்களுக்குப் பொய்ச் சாட்சி சொல்லும் போலித்தியாகிகளும்! காமராசருக்கு மனம் குளிரும்! கைகொட்டி வரவேற்பர் மக்கள் என மகிழ்வார்! ஏனென்றால் மக்களின் முகத்திலே மகிழ்ச்சியைப் பார்த்து, கைதட்டல் கேட்டு நெடுநாட்களாகிவிட்டன அல்லவா! ஒருவேளை காமராசரின் எண்ணத்தில் மண்விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! "காமராசர் வந்திருக்கிறாராமே! யார் அவர்! நாஞ்சில் நாட்டுத் தமிழ்ப்பகுதிகள் தமிழகத்தோடு சேர வேண்டுமெனப் போராடியபோது 'யோகம்' கலையாமல் நிஷ்டையிலிருந்த துறவியா விழா நடத்த வந்திருக்கிறார்! வேடிக்கை வேடிக்கை! குமரிக்கரையின் விழாக்கோலம் அவரதுஉள்ளத்தைக் குடையட்டும். இத்தகைய மகிழ்ச்சி பெறக்கூடிய 'ஒரு பிரச்சினையைத்தான் நான் துச்சமென மதித்திருந்தேனு'என்று அவரது வரட்டு இதயத்தைக் கிள்ளட்டும் என்று எவராவது எண்ணினாலும்கூட அது நியாயமானதுதான்! குமரியின் விடுதலை விழாவைக் காமராசர் நடத்தி வைப்பது, சிலப்பதிகாரத்தை அதில் வரும் கொலைஞன்–கோவலனைக் கொன்ற கொலைஞன் எழுதுவது போன்றது.

ஆனால் நாகர்கோயிலில், மறுநாள் நிகழும் நிகழ்ச்சி, புரட்சி பூத்து நிற்கும் நாடுகளில் என்றென்றும் மறையாது நிற்கக்கூடியதொன்றாகும். புரட்சியை ஒடுக்க கச்சைக் கட்டிய காமராசர் விழாவை நடத்தி வைக்கிறார் நவம்பர் முதல்நாள்! புரட்சிக்கு வித்தூன்றி போர்க்குரலை ஒலிக்கச் செய்த மக்கள் தலைவர்களில் முதல்வரான எங்கள் நெடுஞ்செழியன் நவம்பர் இரண்டாம்நாள் அதே நாஞ்சில்பகுதிக்குப் போகிறார்! நாவலரின் அன்றைய சொற்பொழிவு, தளபதி தன் சேனை வீரர்களைத் தட்டிக்கொடுக்கும் பூரிப்புரையாகும்! திராவிடப் பெருங்குடி மக்களே, சுழன்று சுழன்று எரியும் நீதிவிளக்கைப் பாருங்கள்! நேற்று முன்தினம் நமக்கு எதிர்ப்பாசறையிலே இருந்த காமராசர் இன்று விழாநடத்திப்போக வந்திருக்கிறார். இன்று விரோதிகளாக இருப்போர் நாளை ஓடிவந்து காலில் விழுவர்! காமராசர் இப்போதாவது நல்ல இதயம் பெறட்டும்! தமிழர் உணர்வு பெறட்டும்! சங்கரலிங்கரை எண்ணிப் பார்க்கட்டும்! பறிகொடுத்த நமது பெயரை – 'தமிழ்நாடு' என்ற பெயரை மீட்டிக் கொணரட்டும்–என்று காமராசருக்குப் படிப்பினை கூறும் பைந்தமிழ்ச் சொற்பெருக்காகும்! தமிழகம் இந்தத் திசைமாற்றத்தை ஒரு போதும் மறவாது. கழுதைமீது கொண்டுவரப்பட்டோர் யானை மேல் பவனி வருவர்! கைது செய்தோர் பாராட்டு விழா நடத்துவர். நாவலரின் நாஞ்சில் பேச்சு குலோத்துங்கனே கலிங்கத்துப் பரணி எழுதியதற்கு ஒப்பாகும்!

★

புதிய தமிழகத்தின் கண்ணோட்டம் இது! தலையும் வாலும் தோய்ந்த புதிய மாநிலம்!

இந்தியாவில் உள்ள மாநிலங்களை மாற்றி அமைக்கிற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி நவம்பர் 1-ந்தேதி நடைபெறுகிறது. மாகாணங்கள், சமஸ்தான யூனியன்கள் என்பது போன்ற வித்தியாசங்கள் மறைந்து: சம அந்தஸ்து கொண்ட 14 மாநிலங்கள் நாளை ஆரம்பித்து வைக்கப்படுகின்றன. மேலும் மத்திய அரசாங்க நேரடி ஆட்சியின்கீழ் 6 சிறு பகுதிகள் இருக்குமாம்.

ராஜப்பிரமுகர் பதவி ரத்து செய்யப்படுகிறது.

மாகாண புது அமைப்பின்படி அமைக்கப்படுகிற 14 மாநிலங்களும், அவைகளின் ஜனத்தொகையும் பின்வருமாறு :-

		(லட்சம்)
1	சென்னை	300
2	ஆந்திரப் பிரதேசம்	322
3	அஸ்ஸாம்	99
4	பீகார்	390
5	பம்பாய்	478
6	காஷ்மீர்	44
7	கேரளம்	136
8	மத்திய பிரதேசம்	261
9	மைசூர்	190
10	ஒரிசா	146
11	பஞ்சாப்	160
12	ராஜஸ்தான்	160
13	உத்தரபிரதேசம்	632
14	மேற்கு வங்காளம்	261

ஜனத்தொகையில் முதலாவதாக உள்ள மாநிலம் உத்தரபிரதேசம். சென்னை மாநிலம் 5 வது இடத்தை வகிக்கிறது.

பரப்பில் மிகப் பெரியது பம்பாய் மாநிலம்.

மத்திய அரசாங்க நேரடி ஆட்சியின்கீழ் உள்ள 6 பகுதிகள் பின்வருமாறு :—

1 டில்லி, 2 அந்தமான், 3 இமாசல தேசம், 4 லட்சத்தீவுகள், 5 மணிப்புரி, 6 திரிபுரா–ஆகியவை.

மாகாணப் புது அமைப்பின்படி அமைகிற சென்னை ராஜ்ஜியத்தின் நிலைமை,

தற்போது சென்னை மாநிலத்தில் உள்ள கொள்ளேகாலம் தாலூகா (கோவை மாவட்டத்தைக் சேர்ந்த தாலூகா) தென்கன்னடம் ஜில்லாவில் காசர்கோடு தாலுகா தவிர மீதியுள்ள பகுதி ஆகியவை மைசூர் மாநிலத்துக்குக் கொடுக்கப்படும்.

மேலும் சென்னை மாநிலத்திலிருந்து தென்கன்னடம் ஜில்லாவின் காசர்கோடு தாலுகா, மலபார் ஜில்லா ஆகியவை புதிய கேரள மாநிலத்துக்கு (திருவாங்கூர் கொச்சி) போகும்.

திருவாங்கூர் மாநிலத்தில் தமிழர்கள் வசிக்கிற செழிப்பான பகுதிகளான அகஸ்தீசுவரம், தோவாளை, கல்குளம், விளவக்கோடு, செங்கோட்டை தாலுகாவின் கிழக்குப் பகுதி ஆகியவை சென்னை மாநிலத்துடன் சேர்க்கப்படும். கேரள மாநிலத்திலிருந்து பிரிந்து சென்னை மாநிலத்துக்கு கிடைக்கிற பகுதிகளைச் சேர்த்து கன்னியாகுமரி ஜில்லா என்ற பெயரில் புது ஜில்லா அமைக்கப்படுகிறது. இந்தியாவின் தென்கோடிப் பகுதியான கன்னியாகுமரி முனை இனிமேல் சென்னை மாநிலத்தில் இருக்கும்.

திருவாங்கூர் தமிழர் பகுதிகளில் அணுசக்தி தயாரிப்புக்கு வேண்டிய "தோரியம்" என்ற மூலப்பொருள்கள், அரிசி, உப்பு முதலியவை ஏராளமாகக் கிடைக்கிறது. இவை எல்லாவற்றையும் இனிமேல் சென்னை மாநிலம் பெற்றுப் பயன் அடையலாம்.

புதிய சென்னை மாநிலத்தின் பரப்பு 50,110 சதுர மைல். அதன் ஜனத்தொகை 3 கோடிபேர். நல்ல வேளை! காமராசர் மூன்றாண்டுகளுக்கு முன்னமே பிரதமராக வந்திருந்தால் நமது தலைநகரம் தொண்டிக்குக்கூட மாற்றப்பட்டிருக்கும்!

முகவரி மாற்றம்

இதுவரை மதுரை, கட்டுபாளையம் எண் 4-ல் இயங்கி வந்த தி. மு. கழக மதுரை நகரக்கிளை 1-11-56 முதல்,

66 மேலக் கோபுரத்தெரு, மதுரை,

என்ற முகவரியில் இயங்கும். தோழர்கள், புது முகவரிக்கே தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நன்றி

கடந்த 22-10-56 ல் கோத்தகிரி தோழர் **எம். சேக் இஸ்மாயில்** அவர்கட்கும் தோழியர் **ஆஜராபேகம்** அவர்களுக்கும், கீரனூர் பள்ளிவாசல் வீதி மணமகள் இல்லத்தில் திருமணம், நடைபெற்றது. இதன் நினைவாக 'தென்றல்' வளர்ச்சிக்கு ரூ. 2 அனுப்பப்பட்டது. **–பெற்றுக்கொண்டோம்.** நன்றி!

ஏ. கே. வில்வம்

நிகழ்ச்சிகள்.

நவம்பர் 8 காரைக்குடி அழகப்பா கல்லூரி
,, 10 **சதுரங்கப்பட்டினம்**
,, 15 திருவனந்தபுரம் இடைநிலைக் கல்லூரி
;, 16 திருவனந்தபுரம் கல்லூரி
,. 18 திருவனந்தபுரம் [பொதுக்கூட்டம்]

குறிப்பு : காரைக்குடி, சதுரங்கப்பட்டினம், நிகழ்ச்சிகளில் மட்டும் **அருண்மொழி வில்வம், B. O. L**, கலந்துகொள்வார்.

அடுத்த இதழில்

கண்ணதாசன் எழுதும்

மனம்போல வாழ்வு

— தொடர் கதை —

முன் கதைச் சுருக்கத்துடன் வெளிவரும்.

குறிப்பு : ஏசெண்டுத் தோழர்கள் பிரதிகள் அதிகரிப்பின் அவற்றிற்குரிய டிபாசிட் தொகையையும் சேர்த்து அனுப்ப வேண்டுகிறோம். அப்படி அனுப்புபவர்களுக்கு மட்டுமே அதிகப் பிரதிகள் அனுப்பப்படும்.

மீரான் சாகிப் தெருவில் ...!

[பெரியார் அப்போதுதான் திருச்சியிலிருந்து சென்னைக்கு வந்திருக்கிருர். கழகத் தோழர் ஒருவர் பெரியாரது சட்டையைக் கழற்றிவிடுகிருர். மணியம்மை பெரியாருக்கு விசிறிக்கொண்டிருக்கிருர். தோழர்கள் பலர் பூஜா மனோபாவத்தோடு பெரியாரைச் சூழ்ந்து நிற்கிருர்கள். பெரியாரது அன்பிற்குரிய நாய், நரடிபோல் அவர் பக்கத்தில் படுத்துக் கிடக்கிறது. முக்கிய தோழர் ஒருவர் பேச ஆரம்பிக்கிருர்.]

க. தோ: ...அய்யா! கண்ணீர்த் துளி ஆசாமிகள் ஒவ்வொரு கூட்டத்திலேயும் உங்களைப் பத்தித்தான் பேசுருங்க!

பெரி: ஏன் பேச மாட்டானுங்க! சக்தி இருக்குது பேசிருனுங்க! உங்களுக்கு என்ன இருக்குது!

க. தோ: பேசிறதை யெல்லாம் பேசித் தீத்துப்புட்டு கடைசியா "எங்க பெரியார்! எங்க பெரியார்" இப்புடின்னு வேறெ முண்டாசு கட்டி வைக்கிருங்களே!

பெரி: நியாயந்தானே! அவனுங்க கெட்டிக்காரப் பசங்க! இத்தினெ வருஷமா நீங்க தெரிஞ்சுக்க முடியாததை அவனுங்க தெரிஞ்சுக்கிட்டிருக்காங்க! மனசுக்குள்ளே! அண்ணாத்துரையைப் பற்றி நான் நெனைச்சிருக்குறதை அண்ணாத்துரை மேடையிலே பேசிக்காட்டுருரு! அவ்வளவுதான்! நீங்களுந்தான் இருக்கிறீங்க! என்னுவுது ஒங்களாலே! அய்யா அய்யாங்கிறீங்க! ஆகக்கூடிய காரியம் என்ன செய்திருக்கிங்க! ...மணி கொஞ்சம் சுடு தண்ணி கொண்டுவா! ஜனநாயகம்... ஜனநாயகமின்னு பேசினலும் அந்தப் பசங்க உருப்படியா வேலே செய்யிருனுங்க!

[வாசலில் மிதியடிச் சத்தம் கேட்கிறது. அனைவரும் வாசற்பக்கம் பார்க்கிருர்கள். தோழர் குருசாமி வந்து கொண்டிருக்கிருர்.]

குரு: வணக்கம் அய்யா!

பெரி: ...வாங்க. இன்னிக்கி விடுதலை வெளியாயிடுச்சா?

குரு: ஆமாய்யா!

பெரி: முக்கிய சேதி ஏதாச்சும் உண்டா?

குரு: ரெண்டுநாளா பத்திரிகைகளிலெல்லாம் ஒரே பரபரப்பு அய்யா!

பெரி: என்னங்க அப்படிச் சமாசாரம்?

குரு: போலந்திலே புரட்சி! ஹங்கேரியிலே கலவரம்!

பெரி: (முகத்தைச் சுழித்து) நீங்க ஒன்னு! போலந்திலே புரட்சியா இருந்தா என்ன, பொடலங்காயிலே கலவரமா இருந்தா என்ன! நா அதைக் கேக்கலீங்களே! ராசகோபாலாச்சாரியாரு நம்ப காமராசரு, அண்ணாத்துரை இவுங்க யாராவது என்னைப்பத்தி பேசியிருக்காங்களான்னு கேட்டேன்.

குரு: ஆச்சாரியார் அப்படி ஒன்னும் பேசிடல்லே! நம்ம காமராசர்தான் திருப்பூரிலே மோசமாப் பேசியிருக்கார்.

பெரி: 'பெரியார் அளவுக்கு ராஜகோபாலாச்சாரியார் மட்டமாகப் போய்ட்டாருன்னு பேசினது தானுங்களே!...''

குரு: ஆம்! ஆம்!!

பெரி: அதைக் கேக்கலீங்களே! நேத்து முந்தாநாளு!

குரு: கண்ணீர்த்துளிகள் தான் நிதிக்கூட்டம் நடத்துனுங்க. செலவு போக ஆயிரம் மிஞ்சுதே! நாமும் ஒரு கூட்டம் நடத்தினு என்ன?

பெரி: என்ன? நிதிக் கூட்டமுங்களா? கட்டணம் கெடையாதுன்னு கொட்டை எழுத்திலே போட்டாலுமே கொட்டகை காலியாகத்தான் இருக்குது! நாம்தான் பாக்கிருேமே எத்தினெ மாநாடுகள் அப்படி!

க. தோ: அந்த ஆசாமிகளை ஒழிக்க எங்களுக்கு கட்டளைமட்டும் கொடுங்க நாங்க பாத்துக்கிருேம்!

பெரி: வெங்காயம்! என்ன கட்டளையை நான் கொடுக்கல்லே? 'அம்பராத்தோணியிலேயிருந்து ஒவ்வொன்னுக்கிளம்பிக்கிட்டே தானே இருக்குது! ஒங்களாலே என்ன முடிஞ்சுது? நானுந்தான் என்னென்னவோ பேசிப் பாக்கிறேன் அண்ணாத்துரையைப்பத்தி! அந்த ஆள் அசைவனுங்கிருரே! சும்மா சொல்லக் கூடாது!

[இந்த இடத்தில் குருசாமியின் முகம் சுருங்குகிறது. பார்ப்பதற்குப் பரிதாபமாகத் தெரிகிருர். மற்ற தோழர்கள் இரக்கப் பார்வையைச் செலுத்துகிருர்கள், குருசாமிமீது]

பெரி: அண்ணாத்துரை கெட்டிக்கார ஆசாமிதான்!

குரு: ஐயாவுக்குல்ல, நாம என்ன செய்யணும்? நீங்க சொல்லுங்க! தோழர்கள் செய்து முடிக்கிருங்களா இல்லையான்னு பாருங்க!

பெரி: (வினயமாகச் சிரித்து) இப்பக்கூட நீங்க 'நான் செய்யிறேன்'னு சொல்லமாட்டேங்கிறீங்களே! எனக்கு இவ்வளவு தொல்லையும் ஒங்களாலே தானே!

[தோழர்களின் முகங்களில்கேள்விக் குறி படர்கிறது. எல்லோரும் பெரியார் வாயைப் பார்க்கிருர்கள். பெரியார் மணியம்மை கொண்டு வந்த வெண்ணீரைக் குடிக்கிருர்.]

குரு: (விழித்து) நீங்க சொல்லுவது புரியல்லிங்களே!

பெரி: ஒங்க சொந்தக்காரங்களுக்கெல்லாம் உத்தியோக உயர்வுக்கு சிபார்சு பண்ணப் போயி வந்த வினைதானே இதெல்லாம்! இல்லாட்டா காமராசருக்கும் நமக்கும் என்ன இப்பப் புதுச் சொந்தம் வந்து போச்சு! நம்ம சொன்னதைச் செஞ்சாரேன்னு தான் நாமும் பச்சைத் தமிழருன்னு நாடெல்லாம் கூறினேம். இப்ப என்ன ஆச்சு? அந்த ஆசாமி நம்பளைத் தான் திட்டித் தீக்குருரு!

குரு: (தோழர்களைப்பார்த்து) அய்யா பேசிறதை யாரும் வெளியே சொல்லி விடாதீர்கள்.

பெரி: சொன்னு என்ன மோசம் போச்சு! அண்ணாத்துரைதான் முன்னடியே பேசிப்புட்டாரே!

குரு: (குருசாமி முகம் சிவக்கிறது) அய்யாவுக்குல்ல, கண்ணீர்த்துளிகள் 150 இடங்களில் ஆள் நிறுத்துறாங்களாம்!

பெரி: சந்தோஷம்! சந்தோஷம்! பரவாயில்லியே!

குரு: நான் வரட்டுமா அய்யா! நேரமாச்சு! நாளைக்கு 'பல சரக்கு முட்டையிலே கண்ணீர்த் துளிகளைப் பிடிக்கனும்!

பெரி: (சிரித்துக்கொண்டே) போங்க! போங்க! அதையாவது எழுதுங்க!

தோழர்கள் விடைபெற்றும் போகிருர்கள்; பெரியார் நாயைத் தடவிக் கொடுக்கிருர். ★

நீ யார்?

கவிஞனே, யார் நீ? உவமை அணிகளிலே உலவுகின்ருய்! உருவகத்தின் ஒளிப்பெருக்கிலே உடலெல்லாம் மின்னுகின்ருய்! சொல்லடுக்குப் புத்தாடை புனைந்து மாயத்தோற்றங்கள் பல காட்டுகின்ருய்! நீ யார்? உண்மையில் உன் இயல்புதான் என்ன? கூறமாட்டாயா?

எழில் சலசலக்கத் தென்றல் நுழையும் மலர் இதழ்களிலே பதுங்கிக் கிடக்கும் நறுந்தேனே, நீ? கருத்து விழிகளை வீசிக் கற்பனை அலைகளிலே துள்ளியோடும் புள்ளிமான் போன்றதோ உன் சிந்தை? எண்ண வலைகளைப் பின்னிக்கிடக்கும் சிலந்தியோ நீ? ஒடிந்த நெஞ்ச வீணையிலே மீண்டும் இசை எழுப்பும் உவகையின் உருவமோ, நீ? இருட்டிலே புரண்டு வேதனை முட்களிலே வீழ்ந்து கண்ணீரும் செந்நீரும் சிந்தும் எத்தனையோ இதயங்களில் ஒளியும் குளிரு மிகுந்த கவிதை நிலவைச் சொரியும் புது மதியோ நீ? பாலைவனத்துச் சோலை, வெயிலிலே கண்ட நிழல், கசப்பினிடையே தேன்...எதை வைத்துத்தான் உன்னை அழைப்பது?

உன் புன்னகையில்தான் எத்தனை பொருட் பொதிவு! கவிபாடிக் கவிபாடி எத்தனை உள்ளங்களை நீ வயப்படுத்திவிடுகின்ருய்! உன் சொல்லடுக்குகளிலே மிளிரும் அழகு தான் எத்தனை! உனது எழிற் கற்பனையிலே, மிதந்து வரும் மகிழ்ச்சி நாதத்திலே உள்ளத்தைப் பறிகொடுத்தோர் எத்தனை பேர்! நீ அள்ளித் தெளிக்கும் சிந்தனைத் துளிகளிலே நெஞ்சை நனையவிட்டு நலம் கண்டார் தாம் எத்தனை பேர்! கவிஞனே, நீ அன்பின் உருவம்! அருளின் படைப்பு!

உன் பாட்டிலே மயில் ஆடும். குயில் பாடும். வண்டின் குழலும் அருவியின் முழவும் ஒலிக்கும். செந்தமிழ் நடம் புரியும் இயற்கை அங்கு ஒலிக்கும். நீ சினந்துவிட்டாலோ, எங்கும் சீற்றப் புயல் பரவும்; செந்தமிழ் செங்கனலாகும். காட்டாற்று வெள்ளம் பரவிவரும்; ஊழிக்கூத்தும் ஆடிக் காற்றும் உன்னைவந் தணுகும். பகலவனும் உன் விழிக் கனலிலே வெந்து நீறுவான்.

எனினும் நாங்கள் உன் சினத்தைக் கண்டு அஞ்சவில்லை. உன் வெகுளி, குணமென்னும் குன்றேறி நின்ருர் வெகுளி. அது நேர்மைப் பாதையில் நடை போடுபவர்களை, களங்கமற்ற வாழ்க்கையினரைச் சாடுவதில்லை. ஏய்த்துப் பிழைக்கும் எத்தரையும் வாய்மை மறுக்கும் வம்பரையும், வஞ்சகக் கும்பலையும்தான் சாடுகின்றது. பொருமைக்காரர்களை, மடத்தனத்திலே வளர்ந்து கொழுத்த திமிர் பிடித்தவர்களை, சமூகத்தை அழுகச் செய்யும் சழக்கர்களைத்தான் உன் கவிதை சீறுகின்றது. உனது சீற்றம் நீதியின் சீற்றம்.

இழிஞர்கள் உன் சீற்றத்துக் கிரையாகட்டும். உனது விழிப்பார்வையிலே அவர்கள் வெட்கித் தலைகுனியட்டும். அழியட்டும் பொய்மை...ஒழியட்டும் பழஞ் சாக்கடைத் தனம். சிதறட்டும் குருடர்களின் கோலாட்சி...

அவர்கள் ஒழிந்தால்தான் உனது அமைதிப் பார்வையை, இயற்கைச் சோலையிலே குளித்து. இன்னிசை பாடிச் செல்லும் உன் அருவி நடையை நாடு உணர முடியும்.

காடும் மேடும் கடுமுட் புதர்களும் கொதித்தோடும் உன் காட்டாற்றுப் பெருக்கால் அழியட்டும். அதன்பின் தான் காவும் கழனியும் கருங்குயில் பாடும் சோலையும் பூக்க முடியும்.

உனது புயற்பார்வையால் எண்ணவானிலே செறிந்து கிடக்கும் நீலவானம் எங்கள் விழியைக் கவரமுடியும்.

உனது இடிமுழக்கத்தால் தீமைக்கட்டிடங்கள் இடிந்து நொறுங்கட்டும். அதன்பின்தான் உன் அன்புமாரியின் அருட் பெருக்கிலே அறம் தழைக்க முடியும்; அழகு மலர முடியும்.

வாழ்க கவிஞனே! நீ வாழ்க! நின் உள்ளம் வாழ்க!

—இலனியன்

கொலை வழக்கு

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

தன் மகன் விதவைக்கோலம் கழிய வேண்டும் என்று விரும்பினாள்—ஆனால் உலகம் அவளுக்குச் சொன்ன சொற்கள்: "போடி போ என் பெண் உயிரோடு இருக்கணும்".

"ஏம்மா நீயும் பெண்தானே ஒரு பெண்ணைக் கொலை செய்ய வந்துட்டியே".

"வெட்கமில்லை! மூனைத் தின்னுட்டான். இன்னும் பெண் கேட்க வந்திட்டியா".

கன்னியர்களின் வெறுப்புப் பார்வை-பெற்றவர்களின் முணுமுணுப்பு-காளையர்களின் கேலிப் புன்னகை! சேச்சே! வீரனும் கோழையாவான்.

நாட்கள் நகர்ந்தன. திருமங்கை இதயம் செத்தவனாக உலவினான். இதனிடையில் தான் காஞ்சனா கண்ணப்பனின் மனைவியானாள்.

கண்ணப்பன் தன் நண்பனின் சோகக் கதையை எத்தனையோ இரவுகள் காஞ்சனைக்குச் சொல்லியிருக்கிறான். இருவருமே அவனைப் பற்றி எவ்வளவோ கண்ணீர் சிந்தினர். காஞ்சனையின் உள்ளத்திலும் இரக்கமும் பரிதாபமும் திருமங்கையின் உருவைச்செதுக்கியது. அவனுக்காக அவள் கண்ணீர்சிந்தினாள். தன் தமையனுக்காகச் சிந்தும் தங்கை போல அவனுக்காக—அவனைக் காணும்போதெல்லாம் கலங்கினாள். 'அண்ணா' 'அண்ணா' என்று அழைப்பாள். அவனுக்கு வேண்டியதைச் செய்வதில் முந்திக் கொள்வாள். அத்தனையும் அவன்மீது அவள் கொண்ட இரக்கத்தால் - பெண்மைக்கே உரிய இரக்கத்தால்.

ஆனால் காஞ்சனையின் தோற்றம் அவனை அவன் இதயத்தைக் கெடுத்தது. அவள் அன்பு—அவனுக்கு மதுக் கிண்ணமாக இருந்தது. அவன் இரண்டு மனிதனானான். நன்மைக்கும் தீமைக்கும் இடையில் ஊசலாடினான்?

"அவள்—எனக்குச் சொந்தமானவள்" எண்ணத்தின் ஒரு வடிவம்.

"அடப்பாவி" அவன் நெஞ்சமே அப்படிக் கூறுவதும் கேட்டது.

ஒரு பெண் அன்பு காட்டினால் தாய்மையின் உணர்வால்—பரிவால் நம்மீது அன்பு செலுத்தினால் அறற்குப் பரிசா...நாம் அவளை..." இப்படியும் எண்ணுவான். எனினும்

அவன் உள்ளம் அலாவுதீன் கில்ஜியானது. அவளோபத்மினியானாள்!

இடையில் கண்ணப்பனின் தோற்றம், களங்கமற்ற அவன் உள்ளம் காட்சி தரும்.

திருமங்கை துடித்துப் போனான். 'ஏன் மனிதனுக்கு நன்மையையும் தீமையையும் பகுத்தறியும் இதயம் அமைகிறது. ஒன்று நன்மையை உணரட்டும்-இன்றேல் தீமையை ஆதரிக்கட்டுமே! அப்படி இருந்தால் இத்தகைய துன்பமேது!

அவன் குழம்பிப்போனான்!

காஞ்சனையைக் காணாது நின்றிடுவோம் என்ற எண்ணத்தில் சில நாள் கண்ணப்பன் வீட்டிற்கே வருவதை நிறுத்தினான். ஆனால் கண்ணப்பனும் - காஞ்சனையும் அவனைக் கேட்ட வினாக்கள்!

அடங்கி நின்ற இதயம் மீண்டும் தன் வேலையைத் துவக்கியது. உரத்த குரலில் பேசத் தொடங்கியது.

இறுதியில் அவன் இதயத்தில் வாழ்ந்த மனிதத் தன்மையும் மிருக வெறியும் செய்துகொண்ட ஒப்பந்தம்-ஒரு முடிவுக்கு வந்தான்.

அன்று...,

கண்ணப்பனுக்கு முன்னதாக திருமங்கை அவன் வீட்டிற்குச் சென்றான்.

"காஞ்சனா!"

கதவு திறந்தது. 'அண்ணா' என்று வரவேற்றாள். அடுத்த கணம்...

அவள் நெஞ்சிலே கட்டாரி பாய்ந்தது. 'அண்ணா" அவள் இறுதிக் குரல் காற்றிலே மறையவில்லை. சாயப்போகும் அந்த உடலை அவன் தாங்கிப் பிடித்தான். இறுக அணைத்தான் தன் உதடுகளை.

பிணத்திற்கு முத்தமிட்டான்; இரத்தக் கறை படிந்த முத்தங்கள்!

எல்லாம் ஒரு கணம்! திறந்து கிடந்த கதவின் வழியாக உலகமே அங்கு கூடியது. மனிதப் புலியின் பிடியில் இருந்து அந்தப் பிணத்தை மீட்டது.

★

பிடிபட்டான் - அவன் நீண்ட பெரு மூச்சுவிட்டபடி நின்றான். அவன் முகத்திலே இருந்த உணர்ச்சி...

"நான் காஞ்சனையைக் களங்கப்படுத்தவில்லை. அவள் பிணத்தைத்தான்...நான் என் நண்பனுக்குத் துரோகம் செய்யவில்லை. துயரம் கொடுத்தேன் நான். என்னை நான் தண்டித்துக் கொள்ளவில்லை. சட்டமே! சமுதாயமே உன் விருப்பப்படி என்னைப் பழிவாங்கிவிடு"என்று கூறுவதுபோல இருந்தது.

★

அமைதி கலைந்தது! நீதிபதி வழக்கின் சாரத்தைக் கூறி முடித்துவிட்டார் - தீர்ப்பு...

தீர்ப்பு நாளைக்கென்றார்!

கண்ணப்பன் கடைசி முறையாகத் திருமங்கையைப் பார்த்தான். ★



வாழ்க !

வாழ்க! இந்தச் சொல் நம் தமிழக விழாக்களில் ஒலிக்காமல் இருக்கமுடியாது. மணவிழா, பொங்கல் விழா ஏனைய எல்லா விழாக்களிலும் வாழ்க என்ற சொல்லே ஒலிக்கிறது. மணவாழ்வு ஏற்கும் மணத்துணைவர்களை எல் லோரும் வாழ்த்துகிருர்கள். பின்னர், மணத்துணைவர்கள் புதல் வரைப் பெற்றபின், தம் குழவி யோடு பொங்கல் விழாபோன்ற விழாக்களைக் கொண்டாடி, வாழ்க என்று வளம் கூறுகின்றனர். மெய்யாக, மணவிழாக்களில் 'வாழ்க' என்று வாழ்த்தினல் மட்டும் போதாது. வாழ்வு மரபில் நின்று வாழ்ந்து, வாழ்த்து மரபில் நின்று வாழ்த்தப் பயிலவேண்டும். தமிழகம் இழந்த செல்வங்களை மீண்டும் அடைவதற்கு 'வாழ்க' என்னும் சொல்லின் பண்பு வளமே தூண்டும் ஆற்றலுடையது.

வாழ்க என்னும் சொல்லாக்க வளம் பெரிது. வாழ், வாழ்தல், வாழ்த்து, வாழ்நாள், வாழ்த்திதழ், வாழ்வரசி முதலிய எண்ணற்ற தொடர் சொற்களும் 'வாழ்' என்ப தன் அடிப்படையிலே பிறக்கின்றன. தமிழ்மொழியின் சொல்வளத்தை இந்தச் சொல் கொண்டுள்ளது. வாழ்க என்னும் சொல்லுக்கு இலக்கண விளக்கம் கொடுத்தால் அது வியங்கோள் வினைமுற்று எனப்படும். தமிழ்மொழி ஒன்றில் தான் 'வியங்கோள்' என்பது உண்டு. கட்டளையிடாமல், வேண் டல், வாழ்த்தல் முதலிய பொருள் களில் வரும் வினைச்சொல் 'வியங் கோள் வினை' என்று சொல்லப் படும். தமிழர்கள் திட்டும்போது கூட, கட்டளை பிறப்பிப்பதில்லை. வேண்டுகிருர்கள். உதாரணமாக ஒழிக, அழிக என்ற சொற்கள்கூட, வியங்கோளிலேயே இருப்பது இதற்குச் சான்ருகும்.

உயிர் என்ருல் என்ன? இதற் குத் தக்க விளக்கம் தருகிருர் ஆசிரியர். ஆன்-ஆன்மா இவற்றிற் குரிய வேற்றுமைகளை விரிவாக எடுத்துச்சொல்கிருர் ஆசிரியர். அழிதல், சாதல், இறத்தல், மாள் தல் என்ற எல்லாச் சொற்களும் ஒழிதல் அல்லது இல்லாதுபோதல் என்னும் பொருளை உடையவை என்று பொதுவாகக் கருதப்படு கிறது. உண்மையில் சொல்லா ராய்ச்சிப்படி பார்த்தால் பொருளில் வேற்றுமை இருக்கிறது என்பதைத் தெளிவாக விளக்குகிருர் ஆசிரியர். அதேபோல ஆசிமொழியும் வாழ்த் தும் முற்றிலும் ஒன்றென்று கருதி வரும் கருத்துச் சற்றுப் பிழை யானது என்பதை விரிவாக எடுத் துரைக்கிருர்.

பொதுவாக, தலைப்புக்கு ஏற்றபடி எழுதும் திறமை ஆசிரியரின் தனிப் பண்பு என்பதை நிரூபிக்கிறது இந் நூல். கண்ணல் காணமுடியாத பொருளைப்பற்றி (Abstract Subject) விளக்கமாக எழுதும் வல்லமை மிகச் சிலரிடம்தான் காணப்படு கிறது. அந்த மிகச் சிலரில் ஆசிரி யர் முன் நிற்கிருர். அவரது அரிய ஆராய்ச்சி, தமிழின வைரிகளுக்கு எரிச்சலையும் ஆத்திரத்தையும் மூட்டி வருகிறது. அதனைப் பொருட்படுத்தாது நூல் எழுதும் ஆசிரியரையும் அவரது திறமையை யும் பாராட்டத்தான் வேண்டும்.

"வாழ்க' எனும் இந்த நூலைத் தமிழ்மக்கள் அனைவரும் வாங்கிக் கற்கவேண்டும். திருமண விழாக் களுக்குப் பரிசு தர விரும்பும் திராவிடப் பெருங்குடி மக்கள் இந் நூலையே தேர்ந்தெடுக்க வேண்டு கிரேம். இந்நூலை அழகுற வெளி யிட்டுள்ள அருணேதயத்தாரைப் பாராட்டுகிறேம்.

விலை ரூ 3-0-0

வெளியிட்டோர் : அருணேதயம், இராயப்பேட்டை, சென்னை-14.

உலகப் பேரறிஞர்களின் மலர்மணம்

அறிஞர்கள் பலர் உன்னதமான கருத்துக்களை உலகத்துக்குத் தந் துள்ளார்கள். ஒரு நாட்டிலுள்ள அறிஞர்கள் தரும் கருத்துக்களே உலகத்தை உய்விக்கப் பயன்படும் போது, உலகத்து அறிஞர்கள் பலர் தந்த கருத்துக்கள் உலகம் உய்ய-சமுதாயம் வளர்ச்சியடைய மிகவும் பயன்தரத் தக்கனவாகும்.

இத்தொகுப்பில் மேனட்டறிஞர் களது கருத்துரைகளும் இடம் பெற்றிருக்கின்றன.மதம், தொழில், காதல், கடவுள் முதலிய ஒவ்வொரு துறையையும் பற்றிச் சொன்ன ஒவ் வொரு நாட்டறிஞரின் கருத்தும் இடம்பெற்றிருக்கிறது. ஆனல், கடவுளைப் பற்றி அறிஞர் அண்ணு அவர்கள் எவ்வளவோ கருத்துக் களைச் சொல்லியிருக்கும், அந்தப் பகுதியில் அவரது கருத்து இடம் பெருதது வருந்தத்தக்கது. கடவுளைப் பற்றி அண்ணு அவர் களின் கருத்தில் ஒன்றுகூட இந்தத் தொகுப்பாசிரியரது கண் ணில் படாதது விந்தையே!தொகுப் பாசிரியர் இனி எழுதும் தொகுப் புக்களிலாவது தமது பணியைச் சரிவரச் செய்வார் என்று எதிர் பார்க்கிறேம்.

உலக அறிஞர்களின் கருத்துரை களை எங்கெங்கோ தேடாமல், தீண்டாமல், குறிப்பிட்ட இடத் திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் இந்த நூலினல்! அனைவரும் வாங் கிப் பாதுகாக்க வேண்டிய நூல். இந்த நூலை வெளியிட்டவர்களும் அருணேதயத்தார் தான்.

தொகுத்தவர் :

கி. மா. பக்தவத்சலன்

பரிசுப்பதிப்பு : விலை ரூ 2-0-0

வெளியிட்டோர் : அருணேதயம், இராயப்பேட்டை, சென்னை-14.

'நயா' காலண்டர்!

இந்திய சர்க்காரின் எதேச்சாதி காரப் போக்குக்கு வர வர அளவே இல்லையென்ருகிவிட்டது. எந்த ஒரு விஷயத்திலும் சரியே, இந்திய சர்க்கார் மாநில சர்க்காரை அடக்கி ஆளத் திட்டம் தீட்டுகிறது. அதிலும் சென்னை மாநிலத்தை - தமிழ்நாட்டை எந்தெந்தவகையிலே அடிமைப்படுத்த வேண்டுமோ அந்தந்த வகையிலே அடிமைப் படுத்தி வருகிறது.

கட்டாய இந்தியைத் திணிக் கிறது. 'கட்டாய இந்தியைப் புகுத் தாதே' என்று நாம் கூறினல், 'கட்டாயம் கிடையாது' என்று ஒரு இடத்தில் கூறுகிற நேரு, மற்றே ரிடத்தில் இந்தியைப் பரப்புவதற் குரிய வழி வகைகளை எடுத்துரைக் கிருர். உண்மையிலேயே ஏமாந்த மாப்பான்மை திராவிடத்தில் இருக்கின்ற ஒரே காரணத்தால் வடநாட்டு அரசியலார் தங்கள் வாழ்வுக்கு வழி வகை கண்டுபிடித் துக்கொண்டார்கள்.

அஞ்சல் அட்டைகளிலும், மணி யார்டர் கூப்பன்களிலும் இந்தி எழுத்தைப் பொறித்து வேடிக்கை பார்க்கிறது இந்த விநோத சர்க்கார். சென்னை மாநில சர்க்காருக்குச் சூடே கிடையாது. பதவியிருந்தால் போதும் என்ற பண்புடையவர் களால் ஆளப்படும் இந்த மாநிலத் துக்கு இதைவிட ஆபத்தான நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை.

இப்போது வடநாட்டு ஏகாதி பத்தியம் ஒரு பைத்தியக்காரத்தன மான திட்டத்தைக் கொண்டு வரப் போகிறது. நாம் என்னதான் சத்தம் போட்டாலும் சரி, வட நாட்டு சர்க்கார் தனது காரியங் களை-தனது கொள்கைகளை மெது மெதுவாக நிறைவேற்றித்தான் வரு கிறது. அந்த முறையிலே தற் போது ஒரு புதிய திட்டம் கொண்டு வந்திருக்கிறது.

இப்போது இருக்கிற காலண் டரைத் தள்ளிவிட்டு இந்தித் தேதி கள் கொண்ட புதுக் காலண்டரைப் புகுத்தும் திட்டம்தான் அது. இந்த அபூர்வத் திட்டத்தை ஒரு குழு தயாரித்துக் கொடுத்திருக்கிறதாம். 1942 ம் ஆண்டிலே ஆராய்ச்சி செய்ய முற்பட்ட அந்தக் குழு, நான் காண்டுகளுக்குப் பிறகு இந்த அதிசயக் கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்திருக்கிறது. இப்போது நமது நாட்டுக்கு முக்கியமான பிரச்சினை இந்தக் காலண்டர் தான் போலும். கையிலே அதிகாரம் இருக்கிறது என்பதற் காக-எதற்கெடுத்தாலும் குழு ஒன்று அமைத்துக்கொண்டு ஏராளமான பணத்தை வீண் செய்வதிலே வட நாட்டு சர்க்காருக்கு-அதன் அங்கத் தினர்களுக்கு விருப்பம் அதிகமாகத் தான் இருக்கிறது. பணத்தைச் செலவு செய்து பண்பான திட்டத் தையோ உருப்படியான திட்டத் தையோ கொண்டுவந்தால் வர வேற்கலாம். அதை விட்டு விட்டு அபத்தக் களஞ்சியமான திட்டங் களைக் கொண்டுவரும் அரசாங் கத்தை வெளிநாட்டார் தெரிந்து கொண்டால் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

சாலிவாகன சகாப்தத்தைக் கணக் கிட்டு புதிய காலண்டர்கள் தயாரிக் கப் போகிருர்களாம். அதன்படி 1956 ம் ஆண்டு 1879 ம் ஆண்டு என்று கணக்கிடப்படுமாம். இந்த முறை 1957 ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ந் தேதியிலிருந்து அமு லுக்கு வருமாம்.

இருக்க இடம் கொடுத்தால் படுக்கப் பாய் கேட்கும் நிலையில் இருக்கிறது வடநாட்டு சர்க்காரின் போக்கு. 'நயா பைசா' திட்டத்தை காங்கிரஸ் திராவிடர்கள் ஆதரித்த தன் விளைவுதான் இத்தகைய புதிய திட்டம். வடநாட்டு சர்க்கார் தென்னகத்தை ஏமாளி என்று எண்ணிக்கொண்டுதான் தனது ஆதிக்கத்தை இப்படிப் பல பல வழிகளிலும் புகுத்துகிறது. இதை அறிந்துகொள்ள வழியில்லை இந்த மாநிலத்துக் காங்கிரஸ்காரர் களுக்கு. இவர்கள் செய்கின்ற செய லால் தமிழகத்தின் மானம் போவ தோடு மட்டுமல்லாமல், அதன் வீரம் விவேகம் முதலியனகூடப் பறிமுதல் செய்யப்படுகிறது வட நாட்டு சர்க்காரால்.

எந்த அளவு துணிச்சல் இருந் தால்-எந்த அளவு ஆணவம் இருந் தால்-இந்தப் 'புது' காலண்டர் முறையைக் கொண்டுவர வடநாட்டு சர்க்கார் எண்ணும்?

வடநாட்டு சர்க்கார் கொண்டு வந்துள்ள புதிய காலண்டர் திட்டத்தைக் கீழே தந்துள்ளோம்.

1. அலுவலகங்களில் இனிமேல் இப்போது இருக்கிற காலண் டருடன் இந்திக் காலண்டரும் இருக்கும்.

2. அடுத்த ஆண்டு(1957)மார்ச் மாதம் 22ந் தேதி முதல் இந்தப் புதுக் காலண்டர் அமுலுக்குவரும்.

3. அரசாங்க'கெஜட்'(அறிக்கை) களில் ஆங்கிலத் தேதியுடன் இனி மேல் இந்தத் தேதியும் போடப் படும். படிப்படியாக ஆங்கிலத் தேதியைக் குறைத்து இந்தித் தேதியை மட்டுமே போட ஆரம் பிப்பார்கள்.

4. வானெலியில் காலையில் ஆங் கிலத் தேதி சொன்னதும் இந்தித் தேதியையும் சொல்லுவார்கள்.

5. இந்தி காலண்டரைப் பயன் படுத்தும்படி மாநில அரசாங்கங் களுக்கு மத்திய அரசாங்கம் உத்தரவு போடும்.

இதுதான் இந்திய சர்க்காரின் புதிய திட்டம்! இதன்படி மாதங் களையும் மாற்றியிருக்கின்றன. அவற்றின் பெயர்களைக் கேட்டாலே நமக்கு வேடிக்கை ஏற்படுகிறது.

உலக நாடுகளில் பெரும்பான்மை, சதக் கணக்கில்தான் நாணய மதிப்பு இருக்கிறது என்று தத்துவம் பேசி 'நயா பைசா'வைக் கொண்டு வந்த சர்க்கார், இந்தக் காலண்டர் முறையில் மட்டும் உலகத்தில் பெரும்பான்மையான நாடுகளில் இல்லாத புதிய வழக்கத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன?

திராவிடநாட்டு மக்களை ஏமாற்றி-தனது காலடியிலே போட்டுக் கொண்டு எதேச்சாதிகாரத்தைக் காட்டலாம் என்ற ஒரே எண்ணம் தவிர இதற்கு வேறு காரணம் என்ன இருக்கமுடியும்? இந்த மூளையில்லாத சென்னை மாநில அரசாங்கத்துக்குப் புத்தி இனி மேலாவது வருமா?

தமிழ்ப்பித்தன்

நண்பர் மதங்கன் தமிழ்ப்பற்றுமிக்க இளைஞர். சென்னை மாநிலத்திலேயே இருமுறை தமிழில் முதல்வராகத் தேர்ச்சி பெற்றவர். இலக்கிய ஆர்வங்கொண்ட நண்பர் 'தென்ற'லில் அடிக்கடி எழுதுவார். இந்த இதழில், காதலன் பிரிவால் ஏங்கும் பெண் மனத்தை விளக்கியிருக்கிறார். தெளிவான தமிழ் நடை. (ஆ-ர்.)

ஆடுகோ சூடுகோ!

மதங்கன், பி. ஏ.

'காதல்' உள்ளத்திலே புகும் போது, அங்கே அறிவு ஆட்சி புரிய முடிவதில்லை; ஒருபுறத்தே ஒதுங்கி நின்றுகொள்கின்றது. உணர்வின் ஆட்சியே தலை தூக்குகின்றது. அந்த உணர்வின் மிகுதியால், மனித உள்ளம் மற்ற நேரத்தே தான்தானா இதைச் செய்ய எண்ணியது என்று வியக்கும் அளவுக்குச் சில செய்கைகளில் ஈடுபட்டு விடுகின்றது. காதல் மிகுந்த ஓர் உள்ளம், கவிஞன் உள்ளத்தைப் போன்றது. காதலனோடோ காதலியோடோ தொடர்பு கொண்ட சிறுசிறு பொருள்களிலும் அது அழகினைக் காண்கின்றது. அந்தப் பொருளையும்கூடக் காதலிக்கின்றது. இது மனித இயல்பு. இளைஞன், தான் காதலித்த மங்கையின் கைக்குட்டையையோ, அவள் கூந்தலினின்று உதிர்ந்து காய்ந்த மலரையோ எத்தனை நாளானாலும் பத்திரப்படுத்தி அதைக் கண்டு கண்டு மகிழ்வதை நாம் அறிவோம். பெண்களும் இதற்கு விதிவிலக்கல்ல. காதலன் நினைவைக் கிளப்பும் பொருள்களில் அவர்களும் மிகுந்த ஈடுபாடு கொள்கின்றனர். கணவன் உண்ட எச்சில் இலையேயானாலும் அதிலேயே தானும் உணவிட்டுண்பதில் மனைவியர் தனி இன்பம் காணுகின்றனர்.

இலக்கியத்திலே, ஒரு நங்கை புழுதியில் ஆடித்தோய்ந்து அளைய எண்ணுகின்றாள். அதனைத் தன் மேனியிலே பூசிக்கொள்ளலாமோ என்று உருகுகின்றாள். சிறு குழந்தையோ என்பீர்கள். அல்ல, அவளது காதல் அவளை அந்த நிலையில் காட்டுகின்றது. அந்தக் காட்சியைக் காண்போம்.

பாண்டியன் பவனி வருகிறான் என்ற சேதி ஊரெங்கும் நடமாடுகின்றது. யாவரும் மன்னனைக் காண மகிழ்வுடன் காத்திருக்கின்றனர். ஓர் இளநங்கையின் செவிகளிலும் இவ்வின்பச் சேதி நுழைகின்றது. பாண்டியனையே காதலனாகக் கருதிக்கொண்டிருக்கும் மங்கை அவள். அவள் உள்ளம் துள்ளுகின்றது. தெருவில் மன்னன் பரியிவர்ந்து வருங்கால் தன்னைக் காண்பான், தன் விழிகளிலே நடனமிடும் காதலை உணர்வான் என்று நம்பினாள்; தன்னைச் சிறப்பாகப் புனைந்துகொண்டு ஆர்வம் ததும்பும் விழிகளுடன் வாசலிலே நிற்கின்றாள்.

பாண்டியனும் வருகின்றான்; சேனைகள் புடைசூழ, யாவருக்கும் நடுவில் பெருமிதத் தோற்றத்துடன் தனது கனவட்டம் எனும் அழகிய குதிரை பூட்டிய தேரில் வீற்றிருந்து வருகின்றான். புதிதாகத் தோட்டத்திலிருந்து பறிக்கப்பட்ட மலர்களை அழகிய வட்ட மாலையாகத் தொடுத்துத் தன் அகன்ற மார்பிலே அணிந்த காட்சியும், அவனது அழகிய தேரும் அவளது நெஞ்சை அள்ளுகின்றன. அவனையே ஆர்வமுடன் நோக்குகின்றன அவள் தன் கண்கள். அவன் தன்னைக் கண்டு, தன் காதலை உணர்ந்துகொள்வான் என்று நினைக்கின்றாள். ஆனால், மன்னனோ, சற்றே கண்களை இவள்பால் திருப்புகின்றான். ஒரு கணந்தான்; மறுகணம் முகத்தைத் திருப்பிக்கொள்கின்றான். இவளுக்கோ அந்த ஒரு கணமும் மகிழ்ச்சி. பிறகோ, சிறிது ஏமாற்றம்; என்ற போதிலும், அந்த ஒரு கண மகிழ்ச்சியால் அவள் உள்ளம் பாண்டியன் பின்னேயே சென்றுவிடுகின்றது.

பாண்டியனும், தெரு மூலை சென்று மறைந்தான். எங்கும் அமைதி நிலவுகின்றது. பெண்ணின் உள்ளத்திலோ அவனது தேரும், பரியும் மாலையும் நினைவுக்கு வருகின்றன. அவைகள் பெற்ற பேறு கூட நமக்கில்லையே என்ற ஏக்கம் நெஞ்சில் பாய, பாண்டியன் சென்ற வழியையே நோக்கி நிற்கின்றாள். அங்கு என்னதான் இருக்கின்றது? பாண்டியனது குதிரையின் குளம்புகள் பட்டதனால் கிளர்ந்த பொன்னிறப் புழுதிதான் கிடக்கின்றது. புழுதியே எனினும் மங்கைக்கு அதில் ஒருவித வேட்கை எழுகின்றது. தன் காதலைப் பறித்துச் சென்ற பாண்டிய மன்னனது பரிக்கால் பட்டுக் கிளர்ந்த புழுதியல்லவா அது!

கண்ணினின்று மறைந்து பாண்டியனது நினைவை எழுப்ப, அவன் வந்து சென்ற அடையாளமாய் அந்தப் புழுதி ஒன்றுதான் கிடக்கின்றது. வேட்கை பெருகிய மங்கை எண்ணுகின்றாள். "ஆ! இந்தப் புழுதியிலே, மடுவில் பாய்ந்து குதித்து அளைந்து நீராடினாற்போல நான் ஆடட்டுமா? அல்லது இதனை அள்ளித் தலையில் மலர்போலச் சூடிக் கொள்ளட்டுமா? அல்லது தொய்யில் எழுதும் நறுமணப் பொருள்களுடன் இந்தப் புழுதியையும் அழகாகக் கலந்துகொண்டு, பூ இதழை எழுதுகோலாக எடுத்து, அக்குழம்பை மார்பிலும் தோளிலும் பூசிப் பூசி மகிழட்டுமா! இவற்றை எல்லாம் செய்ய என் நெஞ்சம் துடிக்கின்றதே என்கின்றாள். இதோ அந்தப் பாடல்:

ஆடுகோ சூடுகோ ஐதாக்
கலந்துகொண்(டு)
ஏடுகோ டாக எழுதுகோ—நீடு
புனவட்டப் பூந்தெரியல்
பொற்றேர் வழுதி
கனவட்டம் கால்குடைந்த நீறு.

(முத். 53)

பெண்களின் உள்ளத்தே பலப்பல எண்ணங்கள் காதல் மிகுதியால் தோன்றுகின்றன. சிலவற்றை வெளிப்படையாக அவர்கள் கூறிக் கொள்கின்றனர். தோழியிடமோ, மற்றோரிடமோ கூறி ஆறுதல் பெறத் தகும் எண்ணங்கள் அவை. "தோழி, அவரைக் கனவிற் கண்டேன், எனினும் அவருடன் கூடிலேன், அதற்குள் கனவு கலைந்து விட்டது, நான் என்ன செய்வேன்" என்று மங்கை இரங்கிக் கூறுவாள். "காதலன் நினைவால் இரவெல்லாம் துயிலின்றி இருந்தேன்" என்று கூறுவாள். இதுபோன்ற எண்ணங்கள் வெளிப்படையானவை. இவற்றைக் கவிதையில் வடித்துத் தருவதும் கவிஞர்கட்கு எளிது. ஆனால் வேறு சில உள்ளார்ந்த எண்ணங்கள் காதலியின் உள்ளத்திலேயே பிறந்து உள்ளத்திலேயே அமிழ்ந்து விடுகின்றன, காதலியர் அவ்வெண்ணங்களை வெளியிலே கூற வெட்கமுறுவார்கள். அவ்வாறான எண்ணங்களைக் கவிதையில் காட்ட வேண்டுமென்றால் கவிஞன் சிறந்த மனநூல் வல்லவனாக இருத்தல் வேண்டும்.

இங்கு, மங்கை, காதலனது பரிக்கால் கிளப்பிய புழுதியில் தோயவும் அதனைப் பூசவும் விரும்புகின்றாள். அப்புழுதியை அவள் ஏதோ உயர்ந்த பொருள்போல் நினைக்கிறாள்; அது அவள் உள்ளத்தெழுந்த வேட்கை. இதனைத் தோழியிடம் சொல்லக்கட்டாயம் அவள் வெட்கப்படுவாள்.

சொன்னால் தன் பேதமையை எள்ளி நகையாடுவார்களே என்ற காரணந்தான். எனினும் அந்தப் பேதைமை மனதில் தோன்றாமல் இல்லை. இந்த நுண்ணிய உணர்வினையும் கவிஞர் நன்குணர்ந்து பாடல் ஓவியமாகத் தீட்டியிருக்கின்றார்.

இன்பச்சுனை! இலக்கியப்பூச்சரம்!

முல்லை

இலக்கியத் திங்களிதழ்

ஆசிரியர்:-

கண்ணதாசன்

நவம்பர் 16-ம் நாள்

(கார்த்திகை முதல் நாள்)

நாடெல்லாம் மணம் பரப்பும்

தைமூரின் காதலி

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

கொண்ட தைமூரை எதிர்க்க உலகத்திலேயே அரசனில்லை என்று இருமாந்திருந்த நேரத்தில் முரசு கொட்டிக் கூவி யழைத்த உன் வீரத்திற்கு என் நன்றி...யஜ்தானி!.......நியாயத்தைப் புரிந்துகொள்ளாத இந்த உலகம்தான் என்னைப் பழிக்கிறது என்று நினைத்திருந்தேன். தைமூரின் தத்துவத்தை உள்ளும் புறமும் உணர்ந்திருக்கும் துருக்கியருக்கும் புரியவில்லையே' அல்லா அல்லா என்று புலம்பிக்கொண்டு அனாதையாகக் கிடக்கும் தைமூரின் இதயத்தில் ஏன் ஆசைத் தீயை வளர்க்கிறீர்கள்! பிடரிமுடியைப் போர்வையாக்கி புதருக்குள் தூங்கும் சிங்கத்தை ஏன் துயரப்படுத்த வேண்டும்? யஜ்தானி! செந்நீர் வாய்க்கால்களைச் சமுத்திரங்களில் சங்கமமாகச் செய்கிறவன் தைமூர் என்ற கெட்ட பெயரை உலகம் அழியும் வரையில் நான் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டுமா? அழகான டெல்லி நகரத்தில் அடைமழை பெய்தது போல ரத்தத்தைத் தேங்க வைத்து நாக்குத் தட்டி மகிழ்ந்த துஷ்டன் தைமூர் என்ற பழிச்சொல் இன்னும் மறையவில்லை யஜ்தானி! காலை நேரத்தில் இசையை ரசிக்கிறேன்; உச்சிப்போதை உறங்கிக் கழிக்கிறேன்; மாலைவந்தால் மலர் வனத்து மங்கைபோல் மயங்கிக் கிடக்கிறேன். பேராசை பிறக்கப் பொழுதேது யஜ்தானி! தோற்றால் தியாகி வெற்றி பெற்றால் வெறியன் என்ற கவைக்குதவாத சித்தாந்தம் எனக்கு அறவே பிடிக்கவில்லை! ஆயிரக் கணக்கான சேனா வீரர்களின் முன்னோடியான நீர் இன்று என் முன்னால் நிறுத்தப்பட்டிருக்கிறீர்! பெரும் பெரும் தலைவர்களை யெல்லாம் உக்கிச் சாகவைத்த தர்பார் மண்டபத்தில் என்னையு மறியாமல் இன்று நான் அன்பாகப் பேசுகிறேன். ஆணவங் கொண்ட தைமூரா இப்படிப் பேசுகிறான் என்று நீர் எண்ணுகிற அளவுக்கு பண்புடன் பேசுகிறேன். வெடித்துக் கிடந்த உலகத்தை ஒட்டி உருவம் கொடுத்த சாமற்கண்டின் தலைவன்தான் பேசுகிறான் என்று என் மந்திரி பிரதானிகள் வியப்புறும் அளவுக்குப் பேசுகிறேன். யஜ்தானி! எனக்கு அன்பில்லை, இரக்கமில்லை என்கிறார்கள்; தவறு தவறு! அன்பில்லாத மனிதன் உலகிலில்லை! இன்னும் பிறக்கவில்லை. அல்லா ஒருபோதும் அப்படிப் படைக்கமாட்டார்.

"பாதுஷா! மண்ணாசையின் விளக்கம் கேட்கும்போது மகுடியாகத்தானிருக்கிறது; ஆனால் அறமும் நீதியும் அனாதையாகத் தவிக்கும்போதுதான் தத்துவங்கள் தடமாடுகின்றன அரசே!"

"தைரியமாகப் பேசலாம் யஜ்தானி! தவறு இருந்தால் தைமூர் திருத்திக் கொள்வான். மனம் விட்டு உறவாட ஆளில்லாத போதுதானே மனிதன் மிருகமாக வளர்ந்துவிடுகிறான் — இல்லையா?"

யஜ்தானி தைமூரிடமிருந்து இரக்கத்தையோ மன்னிப்பையோ விடுதலையையோ எதிர்பார்க்கவில்லை. அவன் பல்லைக் கடித்தாலே எதிரியின் மூளைக் குழி நெறிக்கப்படும் என்பதை யஜ்தானி அறிவான். "சாகப் போகும்போது ஏன் கோழையாகச் சாகவேண்டும்? துருக்கியச் சேனாதிபதி யஜ்தானி தூக்கு மேடையிலும் கௌரவத்தை இழக்கவில்லை என்று துருக்கி கலிபா நினைத்தால் போதும்! அதுவே எனக்கு பொன் பெற்ற பதக்கம்! என்று யஜ்தானி, தைமூரின் கொலு மண்டபம் எட்டுக்குரல்கள் எதிரொலிக்க எடுத்தியம்பினான்.

தைமூர் புருவத்தை நெறித்துப் முருவல் பூத்திருந்தான். குருகிச் சுருண்ட கரிய தாடியை இடக்கரத்தால் தடவி விட்டுக் கொண்டான்.

பழுதாய்ப் போன வலது காலை உற்றுப் பார்த்தான். ஏதோ சொல்ல உதட்டைச் சுழித்தான். அப்போது, பட்டொளி வீசும் பகட்டான ஆடையுடுத்தி வீர வாலிபனொருவன் சபைக்கு அழைத்து வரப்பட்டான்; கைதியாகத் தான் அழைத்து வரப்பட்டான்.

"துருக்கியர்கள் தங்கள் வாழ்க்கையைப் பற்றி தாதாரியர்களிடம் உபதேசம் பெற்றுப் போக வரவில்லை பாதுஷா! நாட்டைத் துறந்து நாடோடிகளாக விரட்டப்பட்டாலும் வறண்ட சம வெளிகளில் வீரத்தை வணங்கிக்கொண்டே வாழமுடியும் துருக்கியர்களால்! வாள் வலிமை ஒன்றுதான் கௌரவத்தின் சின்னமானால் ரோமானியர்களைக் காட்டிலும் தாதாரியர் நாகரீகமானவர்கள்!'

—கைதிக் கூண்டை நெருங்கிக் கொண்டிருந்த அந்த இளைஞனின் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட இந்த மறுமொழியைக் கேட்டதும் தைமூரின் நெற்றியில் மடிப்பு விழுந்தது. வழக்கம் போல் தனது பிரதமரைப் பார்த்தான் தைமூர். தைமூர் மிருகமாகப் போகிறான் என்று பயந்த யஜ்தானி, "மன்னிக்கவேண்டும் பாதுஷா? அவன்...! அவன்...!

"அவன்! யார் அவன்! கலிபாவின் பூரண அதிகாரத்தைப் பெற்றவனாகவே இருக்கட்டுமே!" - தைமூரின் கண்கள் குருவி ரத்த நிலையை எட்டிப் பிடித்தன.

"இல்லை பாதுஷா' அவன்...!

★ அடுத்த இதழில் ★

சர்வாதிகாரி

பெனிட்டோ அமில்கேர் ஆண்டிரியா முசோலினி ஒரு சர்வாதிகாரி. முசோலினி சாய்ந்துவிட்ட சர்வாதிகாரி என்றாலும் அவன் வேய்ந்துவிட்ட காமக் கூரைகள் எண்ணற்றவை. அவன் சுவைத்த சுந்தர மொழியாள்கள் கணக்கிலடங்கா. பெண்கள் அவனுக்கு தண்ணீர் பட்டபாடு. ஒன்று ஆனதும் மற்றொன்று என்று இந்த ரீதியில் இன்பத்தைச் சுவைப்பானாம்.

ஆனால், நெடுநாள் அவன் உடனிருந்து, அவன் அணைப்பைப் பெற்று, அவனுடனேயே இறந்த அவன் காதலி கிளாரட்டா பெட்டாக்சி (**Claretta Pettacci**) என்பவள், அவன் காதலிகளில் ஒரு விதிவிலக்கு.

முசோலினியின் தனியறைக்கு பலப்பல பாவையர் வருவர் போவராம். பணத்துக்காக வருவராம் சிலர். மற்றும் பலர் கொண்டுவரப்படுவார்களாம்.

முசோலினியின் வாழ்க்கை வரலாறு வரைந்த பாலோ மோனெல்லி (**paolo Monelli**), "முசோலினி காதல் புரிவதில் பழைய முறையையே கையாண்டான். அவன் நேரத்தைப் போக்கி தன விருப்பத்தைப் பூர்த்தி செய்துகொள்ளவே காதல் புரிந்தான்" என்று கூறுகிறான்.

மாக்டா டி பான்டேன்க்ஸ் என்னும் பிரான்சு நாட்டு மாது முசோலினியின் காதலியா யிருந்தாள்.

அவள் ஒரு பத்திரிகை நிருபராக ரோம் நகரத்துக்கு வந்தாள். பின் முசோலினியைக் காதலித்து அவனுடன் இருந்தாள். ஆனால் அவள் காதல் நெடுநாள் நீடிக்கவில்லை.

அவர்கள் காதல் முறிய பல காரணங்களிருந்தனவென்றாலும், முக்கியமானது அவள் ஓர் ஒற்றர் தலைவி யென்பதுதான். ஆதலால் அவளைத் தன் அரண்மனையினின்று வெளியேற்றி விட்டான்.

அவளுக்குப் பிறகு அவனுக்குக் கிடைத்த காதலி கய்லியா எனும் இருபது வயது பாவை. அவள் கணவன் ஒரு படை வீரன். போரின் பொருட்டு அவன் வெளியூருக்குச் சென்றிருந்தான். அப்பொழுது பதினெட்டு வயது முசோலினி இருபது வயது பாவையிடம் இன்பமனுபவித்தான். "நான் விரும்பியபடி அவளைச் சுவைத்தேன்" என்று அவளைப்பற்றி முசோலினியே குறிப்பிடுகிறான்.

அவன் விரும்பியபடியெல்லாம் நடந்துகொள்ள அவள் இடம் கொடுத்தாள். அவன் அப்படிச் செய்த ஒன்றுதான் அவர்களைப் பிரித்தது. அவள் தொடையில் கத்தியால் குத்தி விளையாட விரும்பி அப்படியே செய்ய, அது அவர்களைப் பிரித்துவிட்டது.

ஆங்கிலிக்கா பலாபானேப் என்பவள் முசோலினியின் குணத்தைப் பற்றி சொல்லியிருக்கிறாள். விரைவில் மனதிற்கு மகிழ்ச்சியூட்டிக் கொள்வானும். அவன் பேச்சு ஒருவிதமாக யிருக்குமாம். நிலையற்ற மனமுடையவனும். நரம்பு தளர்ச்சி நோய் கொண்டவன் போன்று இருப்பானும். உடை சரிவர உடுத்தமாட்டானும்.

அடுத்து பள்ளிக்கூடத்தில் பாடம் சொல்லித்தரும் லுயிபியா என்பவள் வந்தாளாம். அவளுக்குத்தான் அவன் எழுதிய கடிதங்கள் அதிகம்.

கிளாரெட்டா பெட்டாக்சிக்கு முன் மற்றோர் பெண் அவன் வாழ்க்கையில் புகுந்தாள். அவள்தான் கன்னீலியர் டான்சி பிட்சாடே என்பவள். அடுத்து வந்தவள் மார்கரிட்டா சார்பாட்டி என்பவள்.

முசோலினிக்கு டான்னா ரகேல் முசோலினி என்னும் மனைவி உண்டு. அவர்களுக்கு ஐந்து ஆண், பெண் குழந்தைகள் பிறந்தன.

கிளாரெட்டா, முசோலினியை ஒரு தெருவில் சந்தித்தாளாம். ஆனாலும் 1936-ல் தான் அவர்கள் உறவு ஆரம்பித்ததாம். பின் ஒன்பது ஆண்டுகள் அவனுடன் இருந்தாள் அவள்.

இருபத்தி நாலு வயதான கிளாரெட்டா முசோலினியை 1936-ல் சந்திக்கும்பொழுது அவனுக்கு வயது ஐம்பத்தி நாலாம்!

முசோலினி வேலை செய்து கொண்டிருக்கும் அறையிலிருந்த இரகசிய கதவைத் திறந்து வந்து அவனுக்கு இன்பமூட்டி விட்டுச் செல்வாளாம்.

பிறகு வந்தது முசோலினியின் வீழ்ச்சி.

ஜெர்மனிக்கோ அல்லது சுவிட்சர்லாந்திற்கோ தப்பித்து ஓட முசோலினி முயன்றானும். ஆனால் அவனைக் கண்டு பிடித்து விட்டனர். அவனுடன் அவன் காதலி கிளாரெட்டா பெட்டாக்சியிருந்தாள்.

இருவரையும் பிடித்து ஓர் அறையில் அடைத்து வைத்தனராம்.

அன்று அவர்களுக்கு கடைசி இரவாதலால் இன்பம் சுவைக்கச் சொல்லிவிட்டு வெளியே காவலிருந்தனராம்.

மறுநாள் பதினொரு மணிக்கு எழுந்தனராம். அவர்களை வெளியே அழைத்துச் சென்று சுட்டுக் கொன்றுவிட்டனர். முசோலினியும், அவன் காதலியும் இறந்துவிட்டனர்.

பின், மிலானில் அவர்கள் உடலைக் கொண்டு வந்து தலை கீழாகத் தொங்கவிட்டனராம்.

அத்துடன் முசோலினியின் காதல் வாழ்க்கை முடிந்தது.

முசோலினி ஆட்சிமுறையில் கண்டிப்பானவனாக இருந்தாலும், பெண்கள் விஷயத்தில் அணில்குணம் படைத்தவனாகவே வாழ்ந்தான்.

இரா. மதனகோபால், பி. காம்.

தேர்தல் வருகிறது ; தெரிந்துகொள்ளுங்கள்:

5. சி. சுப்பிரமணியம்

[இவை வடிவுற்ற வெண்பாக்கள் அல்ல; 'வெண்பா மாதிரி' உதாரணம் : "சோஷலிஸ மாதிரி"]

தங்குவது 'கா'வோடு, சரசமிடல் 'ரா'வோடு
எங்கள் நிதியமைச்சர் இவரென்பேன்-அங்காந்து
எந்நிதிக்கு இவரமைச்சர் என்பீரேல் ராஜாஜி
சந்நிதிக்கு அமைச்சென்பேன் தான்!

கொல்புலியைக் கைமுறத்தால் கொன்றழித்த கோதையரின்
எல்லையினில் வந்தவர்தான் என்றாலும்-முல்லைமலர்
கட்டவிழும் காட்டில் கத்தாழைத் தீநாற்றம்
மொட்டவிழ்தல் போலுதித்தார் முன்!

சின்ன வயதில் இவர்காட்டும் திறமையெலாம்
சொன்னாரை நாம்போற்றச் சொல்கின்றோம்-என்றாலும்
மூட்டையடி சள்ளன்தன் மூன்றுவய துப்பிள்ளை
வேட்டையைப் போலென்றே விளம்பு!

பண்டெவர்தான் செய்துவைத்த பாவமோ, செந்தமிழர்
மண்டையிலே குந்திவிட்ட மந்திபோல்-சண்டாள
காங்கிரசுப் பேரெருமை கலக்கிவிட்ட பெருஞ்சேற்றில்
ஓங்கிஇவர் வந்துவிட்டார் ஒய்!

இரண்டாவ தைந்தாண்டுத் திட்டத்தில் எமக்கென்று
இரண்டா யிரங்கோடி எடுவென்றால்-இரண்டோடி
சற்றேனும் அறிவின்றிச் சாடுகிறார் நமைசிச்சீ
எற்றோ மற்றெற்றோ மற்றெற்று!

அம்மிக் குழவி அடுப்பிவற்றைப் பெற்றாலும்
கும்மிக் குழம்புவைத்துக் கொள்ளலாம்-சும்மா
தோட்டா இல்லாத துப்பாக்கி இதைஒருதாய்
போட்டாளே வேலையற்றுப் போய்!

சிக்கல் தவிர்க்கத் தினந்தோறும் காவல்செயும்
குக்கலுக்கு நாம்போடும் குழம்பெல்லாம்-எக்காலும்
நல்லபயன் நல்கும்! நாடாளும் இவர்க்கிட்டால்
இல்லையடா இல்லையடா இல்!

செந்தமிழைக் கொன்று சிங்கா தனத்தமர
இந்திவரு கின்றதடா இவர்துணையில்-முந்தியிது
கொண்டுவரும் பாழான குப்பைகளை இவர்முன்னால்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

தமிழ்நா டெனும்பெயரே தமிழிலே இல்லையென
உமிழ்ந்தாரே சின்னாள்முன் ஒருவார்த்தை-அமிழ்தான
அவ்வார்த்தை கேட்டும் அரசைஇவர் பால்தந்தால்
எவ்வாறு ஆள்வார் இவர்?

கோவைத் தொகுதியிலே குதிப்பாராம்! நேராகப்
பாவையரைக் கொண்டே பதில்சொல்வோம்-கோவையிதழ்
பெண்களுக்குச் சோறாக்கத் தெரியும் ; இப் பேராளர்க்(கு)
உண்பதல்லால் என்னதெரி யும்?

[சுப்பிரமணியமே அடுத்த இதழிலும் தொடருவார்]

—கதா.

'கா' - காமராசர், 'ரா' - ராஜாஜி.

"வாணெடுங் கண்ணாய்! வனப்புறுந் தோழீ!
நாணொடும் பிறந்து நலனொடும் வளர்ந்து
காதலர் மடியிற் கனியெனத் தவழ்ந்து
தொட்டும் கட்டியும் சுவைத்தும் மகிழ்ந்து
அல்லும் பகலும் ஆசையும் சுகமும்
கண்டு கண்டு களிக்கடல் மிதந்து
பூரித் திருந்து, பூத்த விழிகளை
மூடித் திறந்து இன்பம் முகர்ந்து
வாழ்ந்த எனக்கு வாட்டம் நல்கிப்
போயினர் காதலர் ; போனது இன்பம்!
ஏனவர் போயினர்? என்ன காரணம்?
பொருள்பல தேடப் போயினர்! ஏடி!
பழமைப் பெருமை பலவுங் கொண்ட
எழில்மிகும் இந்த இன்ப நகரில்
மாடத் தூடு மஞ்சம் விரித்து
கட்டித் தழுவிக் கலக்கும் பொருளிற்
பெரிய பொருளும் பிறிதொன் றுண்டோ?
அத்தான் என்பதற் காயிரம் பொன்னும்
முத்தம் கொடுத்தால் மூன்று கோடியும்
மார்பினிற் சாய்ந்தால் வரையிலாப் பொருளும்
பெற்றும் கொடுத்தும், பிறர்கா ணாது
செல்வம் சேர்க்கும் சிறப்பின் நீங்கி
நிலையாப் பொருளை நெஞ்சில் தேக்கி
சென்றனர் என்பால் சிந்தை தந்தவர்!
ஆசை என்னிடம் அதிகம் உண்டு!
அடிக்கடி என்னை அணைப்பவர் அன்றோ!
என்ன இருந்தும் இப்பொழு தன்னவர்
நினைக்கவு மில்லை ; நேர்வரு வோரை
நிறுத்தி, "அம்மா, நேரிழை ஒருத்தி,
மாநிறம் ; கூந்தல் வண்டுக் கருமை
மைவிழி இரண்டும் மானிடம் பெற்றது ;
விழிக்கட் பேதை ; வெண்மதி பாதி
நெற்றியாய்க் கொண்ட நிகரிலா அழகி ;
வாழைத் தொடையில் வளர்சிலைப் பாங்கு!
வாடுவாள் என்னை மனதி லிறுத்தி!
பார்த்த துண்டா? பாவை கைவளை
இருக்கை நீங்கி இழிந்த துண்டா?
கலையும் சற்றுக் கழன்றது முண்டா?
பசலை மேனியில் படிந்தது முண்டா?
உடுக்கை மெல்லிடை உண்டா இல்லையா?
இருக்கின் றாளா? இறந்துவிட் டாளா!'
என்றே னும்அவர் என்னைப் பற்றிக்
கேட்க வில்லையே! கேட்டால் என்ன,
பொருளிற் பாதி போய்விடு மா, சொல்!
கடல்சூழ் எல்லையைக் கடந்து துன்பம்
பெருகிப் பெருகிப் பிழைக்கவு முடியா
மரணக் கடையில் வைக்கிற தென்னை!
எப்படி உய்வேன்? என்றே வருவார்!"
என்று தோழியை எழில்மிகுந் தலைவி
வினவிய இந்த வியத்தகு கருத்து
நற்றிணை நூலில் நெய்தற் றிணையில்
நயமிகு புலவர் நெய்தற் றத்தனார்
வரைந்த தாக மணந்தரு கின்றது!

அது இது:

"வடுவின்று நிறைந்த மான்தேர்த் தெண்கண்
மடிவாய்த் தண்ணுமை நடுவண் ஆர்ப்பக்
கோலின் எறிந்து காலைத் தோன்றிய
செந்நீர்ப் பொதுவினைச் செம்மல் மூதூர்த்
தமதுசெய் வாழ்க்கையின் இனிய துண்டோ
எனைவிருப் புடையார் ; ஆயினும் நினைவிலர்
நேர்ந்த நெஞ்சும் நெகிழ்ந்த தோளும்
வாடிய வரியும் நோக்கி நீடாது
எவன்செய் தனளிப் பேரஞர் உறுவியென்று
ஒருநாள் கூறின்றும் இவரே விரிநீர்
வையக வரையளவு இறந்த
எவ்வநோய் பிறிது உய்வுத்துணை இன்றே!" —130